வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 03.02.2022 வியாழக்கிழமை | இதழ் : 60 | பக்கங்கள் : 16

### நிரந்தர தீர்வு கிட்டும்வரை

# போராட்டம் தொடரும்!

**பருத்தித்துறை மீனவர்கள் அறிவிப்பு சகலரையும் ஆதரவு தரக்கோரிக்கை**

வடமராட்சி, பெப்ரவரி 03

"இந்திய இழுவைப் படகுகளின் எல்லை தாண்டிய அத்துமீறலை தடுத்து நிறுத்துவ தாக தகுதி வாய்ந்த அதிகாரிகள் எழுத்து மூலமான உத்தரவாதத்தை தர வேண்டும். இந்தப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு கிட்டும் வரை மீனவ சமுதாயத்தின் போராட்டம் தொடரும். இந்தப் போராட்டத்தை வடக்கு மாகாணம் முழுவதும் விரிவுபடுத்த பொது அமைப்புக்கள் ஆதரவு வழங்க வேண்டும்", என்று பருத்தித்துறை - சுப்பர்மடம் மீன வர் சமுதாய அமைப்பு அறிவித்துள் ளது. 11

## உத்தரவாதம் வழங்க பின்னடித்த கடற்படை

வடமராட்சி, பெப். 03

இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதாக எழுத்து மூல உத்தரவாதம் தருமாறு மீனவர்கள் விடுத்த கோரிக்கையை காங்கேசன்துறை கடற்படை அதிகாரி மகேஷ் குலசிறி நிராகரித்தார்.

அத்துடன், யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று 3ஆம் திகதி வியாழக்கிழமை இடம் பெறும் அரச திணைக்கள அதிகாரிகள் மீனவர் 11

## யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று முற்றுகை போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 03

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்த வலியுறுத்தி யாழ். மாவட்ட செயலகத்தை முடக்கும் போராட்டம் இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.

வடமராட்சி கரையோரங்களில் இந்திய மீனவர் களின் அத்துமீறல்கள் தொடர்ச்சியாக அதிகரித் துள்ளன. அவர்களால், உயிர் இழப்புக்களையும் பெரும் சொத்து இழப்புக்களையும் சந்தித்து 11



## வடக்கில் நேற்று 33 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், பெப். 03

யாழ்ப்பாணத்தில் 20 பேர் உட்பட வடக்கு மாகா ணத்தில் நேற்று 33 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தில் நேற்று 105 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே 32 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில், யாழ். போதனா மருத்துவமனையில் 17, சங்கானை பிர தேச மருத்துவமனையில் 2 பேருக்கும், தெல்லிப் 11

## தமிழர் விவசாயம் செய்ய குருந்தூர்மலை பிக்கு தடை!

முல்லைத்தீவு, பெப். 03

குமுழமுனை - குருந்தூர்மலை அடிவாரத்திலுள்ள தண்ணிமுறிப்பு, குமுழமுனை கிராமத்தை சேர்ந்த தமிழ் மக்களுக்கு சொந்தமான வயல்காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என குருந்தூ ர்மலை பிக்கு தடை போட்டுள்ளார்.

குருந்தூர்குளம் நீர்ப்பாசன எல்லைக்குள் அடங்கும் 7 குடும்பங்களுக்கு சொந்தமான 36 ஏக்கர் வயல் காணி களில் கடந்த நவம்பர் மாத கால போக செய்கையை மேற்கொள்ள காணி உரிமையாளர்கள் முற்பட்ட வேளை அந்த இடத்துக்கு சென்ற குருந்தூர்மலை 11

## பருத்தித்துறை பிரதேச செயலகம் மீனவர்களினால் நேற்று முற்றுகை

யாழ்ப்பாணம், பெப். 03

பருத்தித்துறை பிர தேச செயலகத்தை முற் றுகையிட்டு நேற்று மீன வர்கள் போராட்டம் நடத் தினர்.

அண்மையில் வத்திரா யன் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களின் உயிரிழப்புக்கு நீதி கோரி யும் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக வும் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதேச செயலகத்தின் இரண்டு வாசல்களையும் முடக்கி அதற்கு முன்பாக அமர்ந் திருந்து மீனவர்கள் போராட்டத்தை முன் னெடுத்தனர்.

இதனால் பிர தேச செயலகத் 11



## 2030 இல் 70 வீத மின்னுற்பத்தி புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமே!

**மன்னாரில் ஜனாதிபதி தெரிவிப்பு**



மன்னார், பெப். 03

"2030ஆம் ஆண்டாகும் போது, இந்நாட்டின் மொத்த மின்னுற்பத்தியில் 70 சதவீதத்தை மீளப்புதுப்பிக்கத்தக்க சக்திவலுக்கள் ஊடாகப் பெற்றுக்கொள்வதே அரசின் நோக்கம்", என்று ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 11

## சகல பாடசாலைகளுக்கும் ஒரு மாதகால விடுமுறை!

கொழும்பு, பெப். 03

2021 க. பொ. த உயர் தரப் பரீட்சையின் காரண மாக அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற தனி யார் பாடசாலைகளி லுள்ள அனைத்து தரங் களுக்கும் எதிர்வரும் பெப்ரவரி 7 முதல் மார்ச் 7 ஆம் திகதி வரை விடுமுறை வழங்க கல்வி யமைச்சு நடவ டிக்கை மேற் கொண்டுள்ளது. 11

## தொற்றுக்கு 19 பேர் பலி!

கொழும்பு, பெப். 03

கொரோனா தொற்று காரணமாக நேற்று முன் தினம் 19 பேர் உயிரி ழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக் களம் நேற்றுத் தெரிவித்தது. 11

## சுதந்திர தினமான நாளை காலை முள்ளிவாய்க்காலில் ஆர்ப்பாட்டம்!

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் அழைப்பு**

வவுனியா, பெப். 03

இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ்மக்கள் கறுப்பு தினமாகவே அனுஷ்டிக்கவுள்ளோம் என வவுனியா காணாமல் ஆக்கப்பட்டோரின் உற வினர்கள் சங்கத்தலைவி திருமதி சி. ஜெனிட்டா தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்- நாளை நான் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையின் மேற்கூரையில் பெரிய ஓட்டை விழுந்து விட்டது. அதை சரி செய்யும் ஒப்பந்தத்தைக் கொடுப்பதற்காக ஜப்பான், சீனா, இலங்கை ஆகிய முன்று நாடுகளிலிருந்து அரசியல் வாதிகள் வரவழைக்கப்பட்டிருந்தார்கள்.

ஜப்பான் அரசியல்வாதிகள் சேதத்தை அளந்து விட்டு சில கணக்குகள் எல்லாம் போட்டு, ஒன்பதாயிரம் டொலர்கள் செலவாகும் என்று சொன்னார்கள். (4000 டொலர் பொருட்களுக்கு, 4000 கூலிக்கு, 1000 தமக்கு இலாபம்).

சீன அரசியல்வாதிகளும் அதேபோல அளந்து பார்த்து கணக்கு போட்டு, ஏழாயிரம் செலவாகும் என்று சொன்னார்கள். (3000 பொருட்களுக்கு, 3000 கூலிக்கு, 1000 தமக்கு இலாபம்).

அடுத்து நமது இலங்கை அரசியல்வாதிகள், ஒன்றும் அளந்தும் பார்க்கவில்லை. கணக்கும் போடவில்லை. அமெரிக்க அதிகாரிகளை மேலயும் கீழேயும் பாத்துவிட்டு அவர்களுக்குள்ளேயே பேசிவிட்டு, இருபதி ஏழாயிரம் செலவாகும் என்று சொன்னர்கள்.

அமெரிக்க அதிகாரிகள், 'அளந்தும் பார்க்கவில்லை. கணக்கும் போடவில்லை. இருபத்தியேழாயிரம் என்று சொல்கிறீங்களே?' என்று கேட்டார்கள்.

நம்ம அரசியல்வாதிகள் அவர்களின் காதுக்கு அருகே குனிந்து இரகசியமாக சொன்னர்கள், 'எங்களுக்கு பத்தாயிரம், உங்களுக்கு பத்தாயிரம். வேலையை சீனாக்காரர்களிடம் 'சப் கொன்ராக்ற்' கொடுத்து விடலாம்'.

இந்தச் செய்தியைப் படித்தபோது இந்தக் கதைதான் ஞாபகத்திற்கு வந்தது.

கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்திருந்த சிவ ஞானம் சிறிதரன் எம். பி. தெரிவித்திருந்த அந்தக் கருத்துக்களை படித்த போது, சீனாவை வைத்து வேலையை முடித்துவிடலாம் என்று சொன்ன இந்தக் கதை ஞாபகத்திற்கு வந்தது.

பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தில் தனக்கு உடன்பாடு இல்லை என்று தெரிவித்திருந்த சிறிதரன், இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் எமது மக்களை ஏமாற்றும் வகையில் பொய்யாக புனையப்பட் டுள்ள சில விடயங்கள் இருக்கின்றன என்றும், அதிலே தெளிவாகவும் சொல்லப்படவில்லை என்றும் குற்றம் சாட்டியிருந்தார்.

கட்சி என்ன செய்தாலும் அதற்கு மாறாக எதையாவது செய்வது, சொல்வது என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார் என்பது தெரிகின்றது.

இந்தக் கடிதம் ஒன்றும் திடுதிப் என்று எழுதப்பட்டதல்ல. ஒன்றுக்கு பல தடவை கூடி, பேசி தயாரிக்கப்பட்ட ஒன்று. அவ்வாறு தயாரிக்கப்படுகின்றபோது, தானும் அதனைப் பார்க்கவேண்டும் என்று கேட்டுப்பெற்று, அதில் கட்சித் தலைவர் கையொப்பமிடுமுன்னதாக தனது கருத்துக்களை பதிவுசெய்வதே கட்சி அரசியலில் ஓர் அரசியல்வாதிக்கு இருக்கவேண்டிய பண்பு. ஓர் அமைப்பிற்குள் (இயக்கத்தில்)தலைமை முடிவெடுத்து, எல்லாம் முடிந்துவிட்டபின்னர் அது குறித்து பேசுவது, அதுவும் பொதுவெளியில் பேசுவது அல்லது விமர்சிப்பது எத்தகைய 'குற்றத்திற்குரியது' என்பது, கிளிநொச்சியில் வாழ்ந்த சிறிதரன் அறியாததல்ல.

நடந்து முடிந்த தமிழக சட்டமன்ற தேர்தலில் ஈழத்துக்கான வாக்கெடுப்பு நடாத்தப்படவேண்டும் என்று திராவிட முன்னேற்றக்கழகத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், இதே விடயம் ஏற்கனவே ஜெயலலிதாவால் சட்டமன்றத்தில் தீர்மானமாக கொண்டுவரப்பட்டிருந்ததாகவும், எனவே இத்தனையும் நடந்து முடிந்த பின்னர், பதின்மூன்றை வலியுறுத்தவது பொருத்தமானது அல்ல என்றும் சிறிதரன் தெரிவித்திருந்தார். அவர் இதன்மூலம், தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டால் அது சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒன்று என்று சொல்ல வருகிறாரோ தெரியவில்லை.

பிரபாகரனின் தாயார் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் சிகிச்சைக்காக தமிழகம் சென்றபோது, சென்னை விமான நிலையத்தில்வைத்தே அவர் திருப்பி அனுப்பப் பட்டார். தமிழகத்தில் ஆட்சியில் இருந்த கலைஞர் கருணா நிதியால் அதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவரது கட்சி, மத்தியில் அப்போது ஆட்சியிலிருந்த காங்கிரசுடன் கூட்டணி அமைத்து, மத்தியிலும் செல்வாக்கோடு இருந்தது.

தமிழக அரசின் 'பலம்' அவ்வளவுதான். அவர்களின் தீர்மானத்திற்கும், விக்கினேஸ்வரன் ஐயா நமது மாகாணசபையில் கொண்டுவந்த இனப்படுகொலைத் தீர்மானத்திற்கும் இடையே எந்த வித்தியாசமும் இல்லை.

- ஊர்க்குருவி

# டெங்கு தொற்றாளர் தொகை மூன்று மடங்கால் அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 03

டெங்கு நோயளர் எண்ணிக்கை 3 மடங்குக்கு மேலாக அதிகரித்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் ஜனவரி மாதம் இறுதி வரை நாட்டில் 7,702 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரியில் 2,122 டெங்கு நோயாளர்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டனர். இதன்படி, 2021 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி மாதத்தை விட இவ்வருடம் 5, 580 டெங்கு நோயாளர்கள் கூடுதலாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஐ)

# கிளிநொச்சியில் மிதிவெடியகற்றல் ஜப்பான் அதிகாரிகள் நேரில்பார்வை!

கிளிநொச்சி, பெப். 03


ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் முகமாலை பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் மிதிவெடி - கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஜப்பானிய தூதரக அதிகாரிகள் சென்று பார்வையிட்டு கலந்துரையாடினர்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை - அல்லிப்பளை பகுதியில் ஜப்பான் நாட்டின் நிதி



உதவியுடன் சார்ப் நிறுவனத்தினால் மிதிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி மிதிவெடி - கண்ணிவெடி அகற்றும் பணிகளை நேற்றைய தினம் அந்தப் பிரதேசத்திற்கு விஜயம் செய்த ஜப்பானிய தூதரக அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர். அத்துடன், வெடிபொருள் அகற்றலில் இருக்கின்ற தாம தங்கள் மற்றும் இடர்பாடுகள் தொடர்பிலும் கேட்டு அறிந் தனர். (ஐ)



## 1,156 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு, பெப். 03

நாட்டில் நேற்று மாலை வரை ஆயிரத்து 156 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் நேற்றிரவு அறிவித்தது.

இதன்படி, நாட்டில் இது வரை காலமும் கொரோனா தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 13 ஆயிரத்து 478 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# மின்சார சபைக்குள் நெருக்கடி

கொழும்பு, பெப். 03

இலங்கை மின்சார சபையில் பிரச்னைகள் மேலும் அதிகரித்து வருவதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளான.

மின்சார நெருக்கடியை சமாளிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறுகிய கால தீர்வுகளை வழங்குவதற்கு முயற்சிப்பதாக இலங்கை மின்சார சபை கூட்டு தொழிற்சங்கக் கூட்டணியின் அழைப்பாளரர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

நாடு மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற ஒரு நிறுவனம் அவ்வாறான முறையில் இயங்க முடியாது எனவும், களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்துக்கான எரிபொருள் இருப்புக்கள் இன்று காலைக்குள் தீர்ந்துவிடும் எனவும், சப்புகஸ்கந்த அனல்மின் நிலையத்தை இன்று இயங்க முடியாது எனவும் அவர் கூறினார்.

நாட்டிலுள்ள நீர் மின் நிலையங்கள் கூட பாரிய பிரச்னைகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க அமைச்சர்கள் மற்றும் பாராளு மன்றம் தவறிவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.





# மகாஜனக் கல்லூரியின் நுழைவாயில்கள் திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 03

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நுழைவாயில்கள் திறப்பு விழா நேற்று இடம் பெற்றது.

கல்லூரியின் மேற்கு பக்க நுழைவாயிலுக்கு, 1979ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதர பழைய மாணவர்கள் மற்றும் 1982ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பழைய மாணவர்கள் நிதி அனுசரணை வழங்கியுள் ளனர்.

அத்தோடு கல்லூரியின் கிழக்கு பக்க நுழைவாயிலுக்கு 1998ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண பழைய மாணவர்கள் மற்றும் 2001ம் ஆண்டு க. பொ.த.உயர்தர மாணவர்கள் நிதி அனுசரணை வழங்கியுள்ளனர்.

நேற்றைய நிகழ்வில் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu
03.02.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## மக்களுக்கான ஊடக அறம்?

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் தெளிவான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார். இந்திய பிரதமர் மோடிக்கு அனுப்பிய கடிதத்தில் கையெழுத்திட்ட விடயம் சிலரால் உண்மைக்கு மாறாக பிரசாரம் செய்யப்படுகின்றது. சிவில் சமூகத்தின் பெயரிலும் அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆறு கட்சிகள் இணைந்து வெளியிட்ட கடிதத்தின் உள்ளடக்கத்தை வாசிக்காமலேயே பலரும் கருத்து தெரிவித்திருக்கின்றனர். உண்மைக்கு மாறான கருத்துக்களை மக்கள் மத்தியில் விதைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. ஏற்கனவே அவநம்பிக்கையால் சிதறியிருக்கும் மக்கள் மேலும் குழப்பப்படுகின்றனர். இதனால் மேலும் தமிழ் தேசிய அரசியல் பரப்பு சிதைவுறும்.

இந்த விடயம் தொடர்பில் விக்னேஸ்வரன் தெளிவாகவும் சரியாகவும் பேசியிருக்கின்றார். அரசியல் யாப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு கோருவதன் மூலம், இனப்பிரச்னைக்கான நிரந்தர தீர்வை கோரவில்லையென்று குறிப்பிட்டிருக்கும் அவர், பிறிதொரு முக்கியமான விடயத்தையும் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அதாவது, 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு கோருவது, தமிழ் மக்களுக்கு அதிக அதிகாரம் கிடைக்கும் என்னும் நோக்கத்தில் அல்ல மாறாக, இந்த திருத்தச் சட்டமும் இல்லாமல் போனால், தமிழர்களுடைய அதிகாரம் முழுவதும் சுரண்டப்பட்டுவிடும்.

ஏனெனில், 1972, 1978 அரசியல் யாப்புக்கள் கொண்டுவரப்பட்ட போது, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் எதிர்க்கவும் புறக்கணிக்கவும் முடிந்தது. ஆனால், அதனை தடுத்து நிறுத்த முடியவில்லை. விக்னேஸ்வரன் கூறுவது முற்றிலும் சரியானது. ஏனையோருடன் ஒப்பிட்டால் விக்னேஸ்வரன் அரசியல் அனுபவம் குறைந்தவர். எனினும், சூழ்நிலையையும், அரசியல் கட்சிகளின் பலவீனங்களையும் - அதேவேளை, சர்வதேச அழுத்தங்களிலுள்ள மட்டுப்பாடுகளையும் அவரால் துல்லியமாக மதிப்பிட முடிந்திருக்கின்றது.

ஆறு கட்சிகளின் கடித முயற்சி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஈழநாடு தொடர்ந்தும் சில விடயங்களை வலியுறுத்தி வந்திருக்கின்றது. அதாவது, 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வல்ல ஆனால், ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வை எட்டும் வரையில் அதனை பாதுகாக்க வேண்டியது அவசியம். அந்த அடிப்படையில்தான், தமிழ் கட்சிகள் இப்போது எடுத்திருக்கும் நிலைப்பாட்டையும் நாம் உற்று நோக்கியிருந்தோம்.

ஏனெனில், முன்னைய தலைவர்களான செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றவர்கள் எவ்வாறான நெருக்கடி நிலைமையை எதிர்கொண்டார்களோ, அப்படியானதொரு சூழலைத்தான் இப்போதிருக்கும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்களும் எதிர்கொண்டிருக்கின்றனர். எதனையும் தடுத்து நிறுத்தும் வல்லமை தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள எவரிடமும் இல்லை. வழமைபோல் பாராளுமன்றத்தில் ஓர் ஆங்கிலப் பேச்சு - வழமைபோல் ஒரு கண்டன அறிக்கை - வழமைபோல் இந்திய, அமெரிக்க தூதரங்களுக்கு செல்லுதல் - இவற்றை தவிர, வேறு எதனையும் செய்ய முடியாது. அதேவேளை தற்போதிருப்பதை விடவும் கடுமையானதோர் அரசியல் யாப்பை கொண்டுவந்தாலும், அதனை பார்த்து மனதுக்குள் கொந்தளிப்பதை தவிர தமிழ் மக்களுக்கு முன்னால் வேறு எந்தவொரு தெரிவும் இல்லை.

அதேவேளை இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ இலங்கையின் அரசியல் யாப்பு விடயத்தில் தலையீடு செய்யப் போவதுமில்லை. ஆனால், ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தில் இந்தியா தலையீடு செய்ய முடியும். அதுவும்கூட தமிழர்கள் சத்தம் போடாவிட்டால் நடக்காது. ஏனெனில், தமிழர்களுக்கு அக்கறையில்லாத ஒரு விடயத்தை எவ்வாறு இந்தியா கேட்க முடியும்? ஏனெனில், இந்தியாவிற்கு ஏராளமான பிரச்சினைகள் உண்டு. மோடி அரசாங்கம் உள்ளுக்குள் பலமான நிலையில் இருந்தாலும், அயல்நாடுகளின் விடயங்களில் மிகுந்த எச்சரிக்கையுடனேயே விடயங்களை கையாண்டு வருகின்றது. தமிழர் பிரச்னையில் கரிசனை இருந்தாலும் கூட, இந்தியாவினால் எடுத்த எடுப்பிலேயே விடயங்களில் தலையீடு செய்ய முடியாது. குறிப்பாக, இலங்கை விடயத்தில் இந்தியாவுக்கு ஏற்கனவே கசப்பான அனுபவங்கள் உண்டு.

எனவே, நிலைமை பேசுவது போன்று மேலோட்டமானதல்ல. மிகவும் சிக்கலானது. இந்த ஆபத்தான சூழலை துல்லியமாக மதிப்பிட்டதன் விளைவாகவே, 'ஈழநாடு' தொடர்ந்தும் சில விடயங்களை வலியுறுத்தி வந்திருக்கின்றது. மக்களின் நலனை விடவும் வேறு எந்தவொரு விடயமும் இங்கு முக்கியமானதல்ல என்னும் அடிப்படையிலேயே, விடயங்களை சுட்டிக்காட்டி வந்திருக்கின்றது. மக்களின் வாழ்நிலையையும், இன்று தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளையும் கருத்தில் கொண்டே அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட வேண்டும். மக்களுக்கு அதரவாக இருப்பதுதான் ஊடக அறம். மக்களின் நலனுக்குரிய அனைத்து விடயங்களிலும் ஊடகங்கள் கண்முடித்தனமான ஆதரவை வெளிப்படுத்த வேண்டும். அதேவேளை - ஓர் அரசியல் தீர்மானத்தால் மக்களுக்கு நன்மையில்லை என்றால், ஊடகங்கள் அதன்மீது கண்மூடித்தனமான எதிர்ப்பை வெளியிட வேண்டும். அதுவே மக்களுக்கான ஊடக அறமாகும்.



# சர்வதேச சமூகமும் ஏமாற்றப்பட்டுள்ளது!

**அலசுவது இராஜதந்திரி**

*இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபன வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள கள நிலவரங்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் உரையாடியுள்ளார்.*

*வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் இரு தினங்களுக்கு முன்னர் மேற்கொண்ட யாழ்ப்பாண விஜயத்தையடுத்து ஐ. நா. வதிவிட பிரிநிதி ஹனா சிங்கருடைய யாழ்ப்பாண விஜயம் இடம்பெற்றிருந்தது.*

*எதிர்வரும் 28ஆம் திகதி முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. இக்காலப்பகுதியில் இலங்கை குறித்த எழுத்து மூலமான அறிக்கை மார்ச் மாதம் 3ஆம் திகதி சமர்பிக்கப்படவுள்ளது.*

*இத்தகைய பின்னணியில் ஜெனிவா அனுபவஸ்தரும் நோர்வேயின் சமரச பேச்சுக்களில் அரசு சார்பாக பங்குபற்றியவருமான வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் நீதியமைச்சர் , அலி சப்ரி சகிதம் வட பகுதிக்கு மேற்கொண்ட விஜயம், அரசு தரப்பு எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடர் சம்பந்தமாக தயாராகி வருகின்றதோ என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தது.*

*யாழ்ப்பாணத்தில் வைத்து வெளிவிவகார அமைச்சரும், நீதி அமைச்சரும் கிடைக்கப் பெற முடியாதவை என்று காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் குறித்தும், எப்பவோ நடந்து முடிந்த சமாச்சாரங்கள் என்று வடக்கு - கிழக்கு மனிதாபிமானப் பிரச்னைகள் , போர் குற்றங்கள் என்று கருதப்பட்டவை குறித்தும் கருத்து வெளியிட்டுள்ளதை அறியக் கூடியதாகவுள்ளது.*

*எனவே, இந்த இரு முக்கிய அமைச்சர்களின் வட பகுதி விஜயத்தையடுத்தே ஐக்கிய நாடுகள் ஸ்தாபன இலங்கை வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். வடக்கு - கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களோடு உரையாடியபோது இலங்கை அரசு பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை எதிர்பார்த்ததுபோல நடந்து கொள்ளவில்லை என்று கூறியுள்ளார்.*

*அத்துடன், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 46-1 தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் குறித்து சர்வதேச சமூகத்தை இலங்கை ஏமாற்றியுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது எனவும் ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.*

*ஜெனிவாவில் ஐ. நா.மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர்களில் இலங்கை குறித்த சமாச்சாரங்கள் எதிரொலிக்க ஆரம்பித்த காலம் முதல் எதிர்வரும் 49ஆவது கூட்டத் தொடர் நெருங்கி வருகின்ற காலம் வரை வடக்கு - கிழக்கு மக்கள் நிறையவே எதிர்பார்ப்புகளோடு தமது மனிதாபிமான பிரச்னைகளுக்கான தீர்வுகள் குறித்து எதிர்பார்த்திருக்கின்றனர்.*

*ஆனால், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் குறித்தும், போர் குற்றங்கள் என்று கண்டறியப்பட்டவை தொடர்பாகவும் மனித உரிமைகள் பேரவை வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களது எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்துவதற்கான ஓர் அரங்காக இருந்து வருகின்றதே தவிர இதுவரை காலமும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முன்னெடுத்திருக்கவில்லை. இதற்கு இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்கு பொறுப்புக்கூறல் சம்பந்தமாக வாக்குறுதிகளை வழங்கியமையே முக்கிய காரணமாகும்.*

*ஆனால், இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்கள் தமது வாக்குறுதிகள் மூலம் சர்வதேச சமூகத்தை நம்பவைத்து ஏமாற்றி வருவதையே அதானிக்க முடிகின்றது. இதனையே இலங்கைக்கான ஐ. நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர்கூட யாழ்ப்பாணத்தில் தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதிகளிடம் குறிப்பிட்டுள்ளார்.*

*ஹனா சிங்கர் மேலும் கருத்து வெளியிட்டபோது கடந்த காலங்களில் பல இறுக்கமான தீரமானங்களை ஐ.நா மனித உரிமைகள் பேரவை முன்வைத்ததாகவும் ஆனால் புதிய அரசாங்கம் தற்போது பதவியில் இருக்கின்ற நிலையில் அவர்களுக்கு கால அவகாசத்தை 46-1 பரிந்துரையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக வழங்கியிருந்ததாகவும் ஹனா சிங்கர் தெரிவித்திருந்தார்.*

*இருந்தபோதிலும் தற்போதைய அரசாங்கம் 46-1 தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக அசமந்தப்போக்குடன் இருந்துள்ளதன் காணமாக இத்தடவை ஐ. நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் இலங்கை குறித்த எழுத்து மூலமான அறிக்கை இலங்கை அரசுக்கு அழுத்தத்தை வழங்குவதாக வெளிவரும் என்று ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.*

*எனவே, இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னர் எந்தவோர் அரசு பதவிக்கு வந்தாலும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றி வந்துள்ளதையே இலங்கைக்கான ஐ. நா. ஸ்தாபன வதிவிட பிரதிநிதி யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்துகள் விளங்குகின்றன.*




**மேடம்**
உங்களுடன் வேலை பார்ப்பவர்களால் வந்த சிரமம் விலகும். சுபச்செய்திகள் வரும். நீங்கள் செய்யும் பணி சிறப்படையும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் அதை சமாளிப்பீர்கள்.

**இடபம்**
எதிர்பாலினத்தைச் சேர்ந்த ஒருவரின் உதவி கிடைக்கும். பொதுநல சேவை செய்து பிறரிடம் பாராட்டு பெறுவீர்கள். மற்றவர் நலனில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

**மிதுனம்**
கிடைத்த வாய்ப்பை தவறவிடாமல் சிறப்பாக பயன்படுத்துவீர்கள். புதிதாய் நட்பாகும் நபர்களிடம் அதிக நெருக்கம் காட்ட வேண்டாம். சிறு சங்கடம் ஒன்று ஏற்பட்டாலும் அது இன்றே நீங்கும்.

**கடகம்**
பணியாளர்கள் அகங்காரம் இன்றி செயல்படுவது நல்லது. ரகசியங்களை கையாளுவதில் கவனம் தேவை. சாதனை புரிவீர்கள். பணியாளர்களுக்கு வேலைப்பளு சற்றுக் குறையும்

**சிம்மம்**
கூடுதல் முயற்சி எடுப்பதால் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும். உங்களது கவுரவம் அதிகரிக்கும்படியான செயல் ஒன்றை செய்வீர்கள். முழுமனதுடன் செயலாற்றி சாதகமான பலன்களை பெறுவீர்கள்.

**கன்னி**
பொறுப்பான பணியில் உள்ளோர் பயணம் செல்ல நேரலாம். புதிய வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். மனதிற்குப் பிடித்தவர்களை சந்தித்து சந்தோஷம் அடைவீர்கள்.

**துலாம்**
அதிர்ஷ்டம் கூடும். கூடுதலாக உழைத்து பாராட்டு பெறுவீர்கள். சவால்களை எளிதாக முடிப்பீர்கள். சிறு வெற்றி ஒன்று கிடைக்கக்கூடும். உங்களின் திட்டம் சிறு திருப்பத்துக்குப் பிறகு நிறைவேறும்.

**விருட்சிகம்**
நண்பர்களுக்கு உதவி செய்து நிம்மதியை ஏற்படுத்துவீர்கள். உங்களது செயல்பாடுகளிலும், பணியிலும் அதிக கவனம் தேவை. புதிய திட்டத்தில் மாறுதல் செய்வதால் வெற்றி கிடைக்கும்.

**தனுசு**
பேச்சு, செயலில் கவனமாக இருக்க வேண்டிய நாள். புதிய நபர்களை அதிகம் நம்பாமல் எச்சரிக்கையாக பழகுங்கள். பாராட்டுக்களை பற்றி அதிகப் பெருமிதம் கொள்ள வேண்டாம்.

**மகரம்**
சிறிய செலவு உண்டாகலாம். விரும்பிய மாற்றம் வரும். வாழ்வில் வெளிச்சமான சூழல் உருவாகி மகிழ்ச்சி தரும். மன நிறைவுக்காக கூடுதலாக செலவு செய்ய வேண்டி வரலாம்.

**கும்பம்**
குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாக விடாதீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும். மேலதிகாரியின் உத்தரவை மீற முயற்சிக்க வேண்டாம்.

**மீனம்**
நண்பர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். மனதில் தோன்றும் கற்பனைக் கவலைகளை விரட்டுங்கள். கூடுதல் முயற்சி காரணமாக எடுத்த செயலில் வெற்றி காண்பீர்கள்.

# தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்

## அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் கடிதம்

சென்னை, பெப். 03,

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 21 மீனவர்களை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக் கோரி தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், 'நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து 12 மீனவர்கள் மீன்பிடி விசைப்படகில் நாகப்பட்டினத்திலிருந்து தென்கிழக்கில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு, இலங்கையில் உள்ள காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, காரைக்கால், புதுச்சேரியைச் சேர்ந்த மற்றொரு மீன்பிடிப் படகில் மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற மூன்று சம்பவங்களில், 68 தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, தமிழ்நாடு மற்றும் மத்திய அரசு மேற்கொண்ட கடும் முயற்சிக்குப் பிறகு சமீபத்தில் விடுவிக்கப்பட்டு, தாயகம் திரும்பக் காத்திருக்கிறார்கள். இந்த நிலையில், தமிழ்நாடு மீனவர்கள்



மீண்டும் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம், மீனவ மக்களிடையே பீதியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைச் சிறைகளில் உள்ள நமது மீனவர்கள் நீண்டகாலமாகச் சிறையில் அடைக்கப்படுவது, மீனவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாக்குவதோடு, அக்குடும்பங்களும் வறுமையில் தள்ளப்படுகின்றன. இந்த விவகாரத்தில் நீங்கள் உடனடியாகத் தலையிட்டு இந்தியா மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையே உள்ள இந்த நீண்டகாலப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க, உறுதியான வழிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

மேலும் சிறைபிடிக்கப்பட்டுள்ள 21 மீனவர்கள் மற்றும் 2 விசைப்படகுகளை உடனடியாக விடுவிக்கும் வகையில், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

# அ.தி.மு.க, தி.மு.க. அதிருப்தியாளர்களை கவர்ந்திழுக்கும் முயற்சியில் பா.ஜ.க.

மதுரை, பெப். 03,

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.க., தி.மு.க.வில் இடம் கிடைக்காமல் அதிருப்தியில் இருக்கும் முன்னாள் உறுப்பினர்களை பா.ஜ.கவில் சேர்க்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தமிழக நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகி பா.ஜ.க. தனித்துப் போட்டியிடுகிறது. அனைத்துக் கட்சிகளும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அதிமுகவில் ஆசனம் கேட்டு கிடைக்காமல் அதிருப்தியில் இருக்கும் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பிரபலமானவர்களை பா.ஜ.க.வினர் தேடிப்பிடித்து கட்சியில் சேர்த்து வருகின்றனர்.

எஸ்.எஸ்.காலனி முன்னாள் அதிமுக உறுப்பினர் லட்சுமி பா.ஜ.கவில் சேர்ந்தார். அப்போது, பா.ஜ.க. மாநில பொதுச் செயலர் ஸ்ரீனிவாசன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "தமிழகத்தில் பாஜக பலம் அதிகரித்துள்ளது. பாஜகவின் உண்மையான பலத்தை தெரிந்துகொள்வதற்காக நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிடுகிறோம். தொண்டர்களின் விருப்பத்தின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 13,000 இடங்களில் பா.ஜ.க. வேட்பாளர்களை நிறுத்த முடிவு செய்துள்ளது. இந்த தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை அறுவடை செய்ய பா.ஜ.க. காத்திருக்கிறது. அதிமுகவில் இடம் கிடைக்காதவர்கள் மட்டும் இல்லாமல், தி.மு.கவில் அதிருப்தியில் இருப்பவர்களும் பா.ஜ.கவுக்கு வரவுள்ளனர்.

பல் வேறு கட்சிகளில் இருப்பவர்கள் பா.ஜ.கவினருடன் தொடர்பில் உள்ளனர்" என்றார்.

# காங்கிரஸ் கட்சிக்கு இடம் கொடுக்காதே கோவையில் தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம்!

கோவை, பெப் 03,

கோவையில் முன்னாள் அமைச்சர் வேலுமணியுடன் இரகசிய கூட்டணி வைத்திருக்கும் காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு இடம் ஒதுக்க கூடாது என வலியுறுத்தி திமுகவினர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவை மாநகராட்சியில் உள்ள 100 இடங்களில் பங்கீடு செய்து கொள்வது தொடர்பாக திமுக கூட்டணியில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது. இது வரை காங்கிரஸ் கட்சிக்கு 9 இடங்கள், சி.பி.ஐ கட்சிக்கு 4 இடங்கள், ம.தி.மு.கவிற்கு 3 இடங்கள், மனிதநேய மக்கள் கட்சிக்கு ஒன்ற என இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் சி.பி.எம், விடுதலை சிறுத்தைகள் கட்சியுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுவருகின்றது.




இதுவரை எந்தெந்த இடங்களில் யார் போட்டியிடுகின்றனர் என்பது குறித்து அதிகாரப்பூர்வமாக அறிவிக் கப்படவில்லை.

இதனிடையே கோவை மாநகராட்சி சுண்டக்க முத்தூர் பகுதியில் உள்ள காங்கிரஸ் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள், அந்தப் பகுதியை தங்களுக்கு ஒதுக்க அப்பகுதி தி.மு.க.வினருக்கு சால்வை அணிவித்து ஆதரவு கோரியதாக கூறப்படுகின்றது. இதனால் ஆவேசமடைந்த தி.மு.க.வினர், சுண்டக்காமுத்தூர் பகுதியில் திடீர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சுதந்திர கட்சிக்கான கேள்வி மக்கள் மத்தியில் அதிகரிப்பு

## பெருமை கொள்கிறார் மைத்திரிபால



**கொழும்பு, பெப். 03**

**ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் ஆட்சி அமையவேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். சுதந்திரக்கட்சிக்கான கேள்வியும் தற்போது மக்கள் மத்தியில் அதிகரித்துவருகின்றது - என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது கட்சியைப் பலப்படுத்துவதற்கான பணிகள் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அதற்கு முகங்கொடுப்பதற்கு நாம் தயார். இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கான கேள்வி மக்கள் மத்தியில் அதிகரித்து செல்கின்றது. சுதந்திரக்கட்சி ஆட்சியை மக்கள் கோருகின்றனர். அந்த இலக்கை நோக்கி நாம் பயணிப்போம் - என்றார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பலப்படுத்தி, புதிய ஆட்சிக்கான வியூகம் வகுக்கப்பட்டுவருகின்றது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார். (அ)

# ஜே.வி.பியின் வாக்கு வீதம் 75 வீதத்தினால் அதிகரிப்பு

*கொழும்பு, பெப். 03*

ஜே.வி.பியின் வாக்கு வங்கி 75 வீதத்தால் அதிகரித்துள்ளது. நாட்டு மக்கள் இன்று தேசிய மக்கள் சக்தி பக்கமே நிற்கின்றனர் - என்று பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஜே.வி.பியின் வாக்குவங்கி என்பது வெறும் 3 வீதம் அல்ல. அந்த எண்ணிக்கை தற்போது 75 வீதமாக அதிகரித்துள்ளது. பிரதான கட்சிகளின் ஆதரவாளர்களும், மக்களும் எம்முடனேயே இருக்கின்றனர். அதனால்தான் ஜே.வி.பியின் எழுச்சியை தடுப்பதற்கு நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் ஓர் அங்கமாகவே முட்டைத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதல்கள் மூலம் எமது பயணத்தை தடுக்க முடியாது. முடிந்தால் அரசியல் கொள்கை அடிப்படையில் மோதுமாறு சவால் விடுக்கின்றேன்.

அதேவேளை, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் உயிருக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் குண்டர் குழுவை பயன்படுத்திய அரசியல் தரப்பு அதற்கு பொறுப்புக்கூறவேண்டும்.

இன்று முட்டை தாக்குதல் நடத்தியவர்கள், நாளை எதையும் செய்யலாம். எனவே, அநுரவை காக்குமாறு நாட்டு மக்களும் கோரிவருகின்றனர்-என்றார். (அ)

# ரயில்வே துறைக்குள் 7000 பதவி வெற்றிடம்

*கொழும்பு, பெப். 03*

ஓய்வு பெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கு அனுமதி கிடைத்தால், மிகக் குறுகிய காலத்துக்குள் ரயில் சேவைகள் மீளமைக்கப்படும் என ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ரயில்வே துறையில் தற்போது சுமார் 7,000 பதவி வெற்றிடங்கள் உள்ளதாக அவர் கூறினார்.

தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் போக்குவரத்து அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாகவும் தம்மிக்க ஜயசுந்தர மேலும் குறிப்பிட்டார். (அ)

# ரூபா 5,000 சம்பள உயர்வு கோரி தனியார் ஜனாதிபதிக்கு கடிதம்

*கொழும்பு, பெப். 03*

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை தனியார் துறைக்கும் வழங்க அரசு தலையிட வேண்டும் என தனியார் நிறுவன ஊழியர் சங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

உயரும் வாழ்க்கைச் செலவில் கவனம் செலுத்தும் முடிவை எடுக்குமாறு சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் வாழ்க்கைச் செலவு உயரும்போது உழைக்கும் மக்கள் அவர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் பெறவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனியார் துறை ஊழியர் ஒருவருக்கும் 5 ஆயிரம் ரூபாயை வழங்குவது அரசின் பொறுப்பு என தனியார் நிறுவன ஊழியர் சங்கம் வலியுறுத்துகிறது.

நாட்டின் உற்பத்தி செயன்முறையில் சுமார் 80 சதவீதமான பணியாளர்கள் தனியார்துறை ஊழியர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதாகவும் நிறுவன ஊழியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவர்களில் 60 சதவீதம் பேர் 25 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாகவே வருமானம் ஈட்டுகின்றனர் என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (அ)

# மருத்துவபீட மாணவர்கள் மீது ராகமவில் வைத்து தாக்குதல்!

*கொழும்பு, பெப். 03*

நேற்று அதிகாலை, வெளியாட்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ராகம மருத்துவ பீடத்தின் 04 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மாணவர்களில் மூவர் ராகம வைத்தியசாலையிலும் ஒருவர் நீர் கொழும்பு வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ராகம வைத்திய பீடத்தின் நான்காம் ஆண்டில் கல்வி பயிலும் சில மாணவர்கள் மீது விடுதியில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# திருக்கேதீஸ்வரம் செல்லும் பக்தர்கள் பூஸ்டர் பெற்றிருப்பது கட்டாயமானது

*மன்னார், பெப். 03*

மார்ச் மாதம் 1 ஆம் திகதி இடம் பெற உள்ள மகா சிவ ராத்திரி விழாவுக்காக மன்னார் திருக்கேதீஸ்வரத்துக்கு செல்ல இருக்கும் பக்தர்கள் கட்டாயம் பூஸ்டர் தடுப்பூசியை பெற்று 2 வாரங்களாவது நிறைவடைந்து இருக்கவேண்டும் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

எனவே எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் மன்னாரில் அல்லது தமது மாவட்டங்களில் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியும்.

வேறு மாவட்டங்களில் இருந்து



மன்னார் திருக்கேதீஸ்வரத்துக்கு செல்ல உள்ளவர்கள் பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதில் சிரமம் இருந்தால் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொண்டால் இவர்களுக்கு விசேடமாக பூஸ்டர் தடுப்பூசியை வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

# மன்னாரில் கடந்த 2 நாட்களில் 99 கொரோனா தொற்றாளர்கள்

*கொழும்பு, பெப். 03*

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் 99 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை 60 கொரோனா தொற்றாளர்களும்,நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 39 கொரோனா தொற்றாளர்கள் உள்ளடங்கலாக கடந்த 2 தினங்களில் 99 கொரோனா தொற்றாளர்கள் அன்ரிஜென் பரிசோதனை மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த சடுதியான எண்ணிக்கை அதிகரிப்பு மன்னார் மாவட்டத்தில் ஒமைக்ரோன் தொற்று பரவல் ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதினால் பொதுமக்கள் விழிப்புடனும், அவதானத்துடனும் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மக்கள் சுகாதார வழி முறைகளை கடை பிடிப்பதோடு, மூன்றாவது அல்லது பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக குறித்த தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

2 வது தடுப்பூசியை பெற்றுக் கொண்டு 3 மாதங்கள் கடந்த 20 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் , மூன்றாவது அல்லது பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இதுவரையில் மன்னார் மாவட்டத்தில் 3423 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 36 கொரோனா தொற்று மரணங்கள் மன்னார் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளன.

இவ்வருடம் ஜனவரி 2 ஆம் திகதி கொரோனா மரணம் பதிவாகி உள்ளது. இவ்வருடம் தற்போது வரை 240 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு முதலாவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவடைந்துள்ளன. மொத்தமாக 12,500 மாணவர்கள் குறித்த தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர்.

தற்போது பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது வரை 24,300 இற்கும் மேற்பட்டவர்கள் குறித்த தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர். ஆக கூடுதலாக நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 50.3 சதவீதமான 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர்.மன்னார் மாவட்டத்தில் சராசரியாக இதுவரை 34 சதவீதமான 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர்-என்றார். (அ)

# 46 ஆயிரம் யூரோக்களை சூட்சுமமாக டுபாய்க்கு எடுத்துச் செல்ல முயற்சி

*கொழும்பு, பெப். 03*

ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 46 ஆயிரம் யூரோ நாணயத்தாள்களை சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு எடுத்துச்செல்ல முயற்சித்த இருவர் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் நேற்றுக் காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டனர் என சுங்க ஊடக பேச்சாளர், பிரதி சுங்கப் பணிப்பாளர் சுதந்த சில்வா தெரிவித்தார்.

டுபாய் செல்வதற்கு தயாராக இருந்த இவர்கள் இருவரதும் பயணப் பொதிகளில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த வெளிநாட்டுப் பணம் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

இந்நிலையில், சந்தேகநபர்கள் இருவர் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுங்க ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு



# இலங்கை மின்சார சபைக்கு ஒரு வாரத்துக்கு எரிபொருள்

## உதய கம்மன்பில உறுதி



கொழும்பு, பெப். 03

**இலங்கை மின்சார சபைக்கு ஒரு வாரத்திற்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில உறுதியளித்துள்ளார்.**

நேற்றுக் காலை எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுடன் ஏனைய கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடலின் பின்னரே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபைக்கு தேவையான எரிபொருள் நேற்று முதல் வழங்கப்படுவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இதனால் மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாது என தெரிவிக்கப்பட்டது.

எனினும் நுரைச்சோலை, சப்புகஸ்கந்த, களனிதிஸ்ஸ மற்றும் கொழும்பில் உள்ள மின் உற்பத்தி நிலையமொன்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதன் காரணமாக நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் முன்னறிவிப்பு இல்லாமல் மின்சாரம் துண்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# வவுனியாவில் இரண்டு டிப்பர்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!

வவுனியா, பெப். 03

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இரு டிப்பர் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஹொரவப்பொத்தானை வீதியுடாக ஓமந்தை பகுதி நோக்கி டிப்பர் பயணித்துக் கொண்டிருந்தவேளை மாவட்ட செயலகத்துக்கு முன்பாக டிப்பர் வாகனத்தை சாரதி திடீரென நிறுத்தியுள்ளார்.

டிப்பர் வாகனத்துக்கு பின் பக்கமாக வந்துகொண்டிருந்த மற்றுமொரு டிப்பர் குறித்த டிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இதனிடையே வீதிக்கு அருகே நின்ற மோட்டார் சைக்கிளும் டிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் நின்ற ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பின்பக்கமாக வந்து மோதுண்ட டிப்பர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பகுதியளவில் சேதமடைந்துள்ளன. சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

# கிளிநொச்சியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 வாகனங்களை கைப்பற்றிய பொலிஸார்!

கிளிநொச்சி, பெப். 03

கிளிநொச்சியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 டிப்பர் வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அண்மைக்காலமாக சட்ட விரோத செயல்கள் அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையின் கீழ் சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஒர் சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

முரசுமோட்டை, ஊரியான் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 டிப்பர் வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

நேற்று பிரமந்தனாறு மயில் வாகனபுரம் பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் ஆற்றுப் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு உழவு இயந்திரங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. சாரதிகளும் கைது செய்யப்பட்டனர். (அ)

# சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் பிணை குறித்து 7 ஆம் திகதி தீர்மானம்

கொழும்பு, பெப். 03

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்குவது தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 7ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நீதியரசர்களான மேனகா விஜேசுந்தர மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் முன்னிலையில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு வந்தபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணிக்கு பிணை வழங்க புத்தளம் மேல் நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி மறுப்பு வெளியிட்டது.

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டார்.

ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர்களை உதவி செய்தார் என்றும் சமூகங்களுக்கு இடையில் அமைதியின்மையைத் தோற்றுவித்ததாகவும் தெரிவித்து அவர் கைது செய்யப்பட்டார். (அ)

# களியாட்ட விடுதி சுற்றிவளைப்பு

கொழும்பு, பெப். 03

கொள்ளுப்பிட்டியில் அனுமதிப்பத்திரமின்றி நடத்தப்பட்ட இரவு நேர களியாட்ட விடுதியொன்றை சோதனைக்குட்படுத்தியதில், 12 வெளிநாட்டுப் பிரஜைகள் உள்ளிட்ட 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த 489 மதுபானப் போத்தல்கள் மற்றும் தீர்வை வரி செலுத்தாது கொண்டுவரப்பட்ட 100 வெளிநாட்டு சிகரெட்டுக்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த களியாட்ட விடுதியை வெளிநாட்டுப் பெண்ணொருவரே நடத்தி வந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# விற்பனை நிலையத்துக்குள் புகுந்தது சிமெந்து லொறி!

கொழும்பு, பெப். 03

கஹதுட்டுவ-பொல்கசோவிட்ட சந்தியில் சீமெந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மோட்டார் சைக்கிள், ஓட்டோ மற்றும் கார் ஆகியவற்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பின்னர் குறித்த லொறி, மின்சார உபகரண விற்பனை நிலையத்தின் மீது மோதி நின்றதாக கஹதுட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் ஓட்டோச் சாரதியும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிலியந்தலையில் இருந்து மத்தேகொட நோக்கி பயணித்த லொறி வேகக்கட்டுப்பாட்டை இழந்ததன் காரணமாக இவ்வாறு விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தினால் கடைக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோவுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கஹதுட்டுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# முட்டை தாக்குதல் நடத்தும் தேவை பொதுஜன பெரமுனவுக்கு இல்லை

## கூறுகிறார் எஸ்.பி. திஸாநாயக்க

கொழும்பு, பெப். 03

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மீது முட்டை தாக்குதல் நடத்த வேண்டிய தேவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் முன்னிலை சோஷலிசக் கட்சியினர் இருக்கலாம் எனவும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.



பல்கலைக்கழகங்களில் அதிகாரத்தை முன்னிலை சோஷலிசக் கட்சியினர் கைப்பற்றியுள்ளதால் ஜே.வி.பியினருக்கு இன்று பல்கலைக்கழகங்களுக்குக்கூட செல்ல முடியாத நிலைமை காணப்படுவதாகவும் எஸ்.பி. திஸாநாயக்க சுட்டிக் காட்டினார்.

மேற்படி தாக்குதல் சம்பவத்துடன் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தொடர்புபட்டிருக்க மாட்டார் என்றே தான் நம்புவதாகவும் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

# 40 இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 03

கிராண்ட்பாஸ்-மஹவத்தை வீதி பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 40 இலட்சம் ரூபாவுக்கு அதிக பெறுமதியான ஹஷிஷ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, நேற்று முன்தினம் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, அந்த வீட்டில் பதுங்கு குழி அமைக்கப்பட்டு போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சுற்றிவளைப்பின் போது அதிநவீன இலத்திரனியல் தராசுகள் மற்றும் இரண்டு கைபேசிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)



# 3 மாடி பிரதேசசபை கட்டடம் குருநாகலில் நேற்று திறப்பு

கொழும்பு, பெப். 03

குருநாகலில் புதிய மூன்று மாடி பிரதேச சபைக் கட்டடத்தின் திறப்பு விழா நேற்று நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

மாகாண சபைகள் அமைச்சின் புரநெகும திட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிதியை பயன்படுத்தி இந்த புதிய மூன்று மாடி பிரதேச சபை கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்காக 215 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

புதிய பிரதேச சபைக் கட்டடத்தின் கீழ் மாடியில் பொது சுகாதார அலுவலகம், களஞ்சியசாலை காப்பகம், உணவகம் மற்றும் உடற்பயிற்சி நிலையம் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன. முதல் மாடியில் தொழில்நுட்பப் பிரிவு, நிறுவன பிரிவு, சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பிரிவு, வருவாய் மேம்பாட்டுப் பிரிவு, அச்சகப் பிரிவு, தலைவர் அலுவலகம் போன்றவையும், இரண்டாம் மாடியில் கேட்போர் கூடம் மற்றும் கூட்ட மண்டபம் என்பன கட்டப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பொதுநிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனும் கலந்து கொண்டார். (அ)

# மதுபான கடைகள் நாளை மூடப்படும்

கொழும்பு, பெப். 03

74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மதுபானக் கடைகள், பப்கள், மதுபான விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த தினத்தில் இறைச்சி கடைகளும் மூடப்படும் என்று உள்துறை இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

உள்துறை இராஜாங்க அமைச்சின் செயலாளர் என். எச்.எம்.சித்ரானந்தவின் உத்தரவுடன் இந்த அறிக்கையை அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது. (அ)

# கொரோனா, டெங்குவுக்கு மத்தியில் மற்றுமொரு காய்ச்சலும் பரவுகிறது

கொழும்பு, பெப். 03

கொரோனா மற்றும் டெங்கு காய்ச்சலுக்கு மேலதிகமாக, இந்த நாட்களில் மற்றுமொரு வைரஸ் காய்ச்சல் பரவுவதாக இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.

எனவே, ஏதேனும் நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடுமாறு சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கூறினார்.

விசேடமாக மேல் மாகாணம் உள்ளிட்ட அதிக சனத்தொகையைக் கொண்ட பகுதிகளில் அதிக நோயாளர்கள் பதிவாகுவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# நாடு முடக்கப்படலாம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 03

**தற்போதைய கோவிட் பரவல் அதிகரிப்பானது நாட்டை முடக்க வேண்டிய சூழ் நிலைக்கும் இட்டுச் செல்ல வாய்ப்புள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அதன் மத்தியக் குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோவிட் கட்டுப்பாட்டுக்கு அரசாங்கமும் பொறுப்புடைய தரப்பினரும் உடன் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அவ்வாறு அல்லாத பட்சத்தில் நாட்டை முடக்கவேண்டிய சூழ்நிலை கூட ஏற்படலாம்.

சுகாதார வழிகாட்டி ஒன்று இருக்கிறதே தவிர, அது அரச மற்றும் தனியார்த் துறையினரால் முறையாகப் பின்பற்றப் படுவதில்லை.

மக்கள் இந்த விடயத்தில் இருக்கின்ற அபாய நிலையைப் புரிந்து கொள்ளாமல் செயல்படுகின்றனர். மக்களுக்கான சுகாதார அமைச்சு போதிய விழிப்புணர்வு செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ)

# மீண்டும் வழமைக்கு திரும்பியது நுரைச்சோலை மின்பிறப்பாக்கி

கொழும்பு, பெப். 03

செயலிழந்திருந்த நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளது.

இதன் மூலம் தேசிய மின் கட்டமைப்பில் 100 மெகாவோட் மின்சாரம் சேர்க்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் 3 ஆவது மின்பிறப்பாக்கி மீண்டும் பழுதடைந்ததாக இலங்கை மின்சார சபை நேற்று முன் தினம் அறிவித்திருந்தது.

கடந்த டிசெம்பர் 3 ஆம் திகதி முதல் செயலிழந்திருந்த இந்த மின் பிறப்பாக்கி சீர்செய்யப்பட்டு, கடந்த 31ஆம் திகதி மீண்டும் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டது. (அ)

# இந்திய மீனவர்கள் 21 பேரும் மறியலில்

வடமராட்சி, பெப். 03

பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஏழாம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டுள்ளார்.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 21 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவருக்கு கொரொனா தொற்று ஏற்பட்ட நிலையில் மற்றவர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முற்படுத்தப்பட்டனர். இதன்போது 21 பேரையும் ஏழாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் தொற்று ஏற்பட்டவரை தடுப்பு நிலையத்தில் சிகிச்சையளிக்கவும் நீதவான் உத்தரவு வழங்கியுள்ளார். (அ-02)

# ஆரம்பப் பிரிவு பாடசாலைகளை பரீட்சைக் காலத்தில் திறக்காதீர்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, பெப். 03

க.பொ.த உயர்தரப் பரீட்சையின்போது ஆரம்பப் பாடசாலைகளை திறக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 4ஆம் திகதிக்குள் அனைத்துப் பாடசாலைகளையும் மூடவேண்டும் என்று ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலை அமைப்பில் கொரோனா வைரஸ் தொற்று எண்ணிக்கை அதிகரிப்பு குறித்தும் ஜோசப் ஸ்டாலின் கருத்து தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

ஜனவரி 10 ஆம் திகதி அனைத்து மாணவர்களையும் பாடசாலைக்கு வரவழைக்க அரசு எடுத்த முடிவு, மாணவர்களிடையே வைரஸ் பரவலை அதிகரித்தது.

அனைத்துப் பாடசாலைகளும் பெப்ரவரி 4ஆம் திகதி மூடப்பட்டு, மார்ச் முதல் வாரத்தில் மட்டுமே சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடித்து மீண்டும் திறக்கவேண்டும்-என்றார். (அ)

# ஜே.வி.பியின் தனிப்பட்ட மோதலாக இருக்கலாம்!

## முட்டை வீச்சு குறித்து நாமல்

கொழும்பு, பெப். 03

மக்கள் விடுதலை முன்னணியானது, விடுதலையும் மக்களையும் எரித்த வரலாற்றைக் கொண்ட கட்சி என்று குறிப்பிட்ட இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இது ஜே.வி.பி உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட சண்டையாக அல்லது அவர்களுக்கு இடையேயான சண்டையாகக் கூட இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

அண்மைய சேறு பூசும் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள சக்தி அரசாங்கம் என்ற ஜே.வி.பியின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்தபோதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

சேறு பூசும் தாக்குதலின் பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணி இருந்ததா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கமானது, ஜனநாயக நடைமுறையை தெளிவாக நம்பிப் பாதுகாக்கும் அரசாங்கமாக இருப்பதாகவும் நாட்டில் அரசியல் சக்திகள் இணைந்து வாழவேண்டும் என்று நம்பும் அரசாங்கமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுனவுக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்ற அமைச்சர், எனவே இதை யார் செய்தார்கள் என்பது குறித்து முறையான விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். (அ)

# நீர்க்கட்டணம் செலுத்த தவறிய 48 அரசியல்வாதிகள் மீது வழக்கு

கொழும்பு, பெப். 03

10 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நீர் கட்டணத்தை செலுத்த தவறியதாக கூறப்படும் 48 முன்னாள் மற்றும் தற்போதைய அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யுமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சபையின் சட்டப் பிரிவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, சட்டப் பிரிவு வழக்குப்பதிவு செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரியவருகிறது.

நிலுவைத் தொகையை வசூலிக்க முன்னாள் மற்றும் தற்போதைய எம்.பிக்களுக்கு சட்டப் பிரிவு முன்னதாக இறுதி நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

இறுதி அறிவிப்புகளை அனுப்பிய நிலையில், ஐந்து அமைச்சர்கள் மற்றும் எம். பி.க்கள் தங்களது கட்டுப்பணத்தை அண்மையில் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

குடிதண்ணீர்க் கட்டணத்தை செலுத்தாத முன்னாள் மற்றும் தற்போதைய அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் முன்னாள் எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்கள் என்று கூறப்படுகிறது.

பொது மக்களிடமிருந்து நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு முன்னர், முன்னாள் மற்றும் தற்போதைய அமைச்சர்களிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்குமாறு வாசுதேவ நாணயக்கார மேலும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)



# இலங்கையின் வெளிநாட்டு கடனை சமாளிக்குமா ராஜபக்ஷ அரசு?

ரஞ்சன் அருண் பிரசாத்

> **உலக நாடுகளிடமிருந்து தொடர்ச்சியாக கடனை பெற்று, முழுமையாக கடனாளியாக மாறிய மெக்ஸிகோவை போன்றதொரு நிலைமையை, இலங்கை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறுகின்றார்.**

இலங்கை அரசு வெளிநாடுகளிடம் இருந்து வாங்கியிருக்கும் கடனுதவிகளால் எதிர்காலத்தில் பலவித தாக்கம் ஏற்படலாம் என்று பல்துறை நிபுணர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கை உலகின் பல்வேறு நாடுகளிடமிருந்து பில்லியன் கணக்கான டொலர்கள் உதவிகளை பெற்று வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சமீபத்தில் கூறியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை சனிக்கிழமை சந்தித்துப் பேசிய அவர், சுமார் 2.4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகள், இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு கிடைத்துள்ளது என்றும் பங்களாதேஷிடம் இருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுக்கு உதவிகள் கிடைத்துள்ளதாகவும் கூறினார்.

எதிர்வரும் சித்திரை புத்தாண்டிற்கு முன்னர், சீனாவிடமிருந்து ஒரு மில்லியன் மெட்ரிக் தொன் அரிசியை வாங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். இலங்கையுடன் நட்புறவை பேணி வரும் நாடுகளிடமிருந்தே, இவ்வாறான உதவிகள் கிடைப்பதாக ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, பாகிஸ்தானிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பாகிஸ்தானுக்கான அதிகாரபூர்வ விஜயமொன்றை அண்மையில் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கொண்டிருந்தார். அப்போது இந்த உதவித் திட்டம் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரிசி, சீமெந்து மற்றும் மருந்து பொருட்களை கொள்வனவு செய்யும் நோக்கிலேயே இந்த கடனுதவியை இலங்கை பாகிஸ்தானிடமிருந்து கோரியுள்ளது.

பாகிஸ்தானிடமிருந்து கடனை பெற்றுக்கொள்வதற்கான யோசனையை, வர்த்தக அமைச்சர், விரைவில் நிதி அமைச்சிடம் சமர்ப்பித்து, அதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளவுள்ளதாக தெரிய வருகிறது.

மேலும், இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் கடனை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இதனை சர்வதேச ஊடகமொன்றிடம் தெரிவித்திருந்தார்.

இதற்கு முன்னர் சீனா உள்ளிட்ட நாடுகளிடமிருந்தும் இலங்கை அரசாங் கம் பல்வேறு உதவிகளை பெற்று வருகிறது.

**நீண்டகால திட்டம் அரசிடம் இல்லை**

இலங்கை அரசாங்கத்திடம் நெடுந்தூர திட்டமொன்று கிடையாது என மூத்த ஊடகவியலாளர் இரா.செல்வராஜா தெரிவிக்கின்றார். நாட்டை தொடர்ச்சி யாகவே வீழ்ச்சியை நோக்கி அரசாங்கம் நகர்த்தி வருவதாகவும் அவர் கூறுகின்றார்.

தற்காலிக ஏற்பாடுகளையே அரசாங்கம் செய்கின்றதே தவிர, நிரந்தர ஏற்பாடுகளை செய்ய தவறி வருவதாகவும் மூத்த ஊடகவியலாளர் இரா.செல்வராஜா குறிப்பிடுகின்றார்.

"நாட்டை மேலும் மேலும் கடனில் சிக்க வைக்கின்றார்கள். அந்த நாடுகள் கடனை சும்மா தர போறதில்லை. திருப்பி செலுத்த வேண்டிய கடன் இது. கடன் மட்டும் இல்லை, அதற்குரிய வட்டியையும் செலுத்த வேண்டும். நாட்டின் பொருளாதாரம் மேலும் மேலும் பள்ளத்தை நோக்கி தான் போகுது.

தற்காலிகமாக கடனை வாங்கி, நாட்டு பிரச்சினையை சமாளித்தாலும், எதிர்காலத்தில் இதைவிட பெரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்படும். அப்போது நாட்டு மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்கொள்ளுவார்கள். இது எல்லாம் தற்காலிக ஏற்பாடுகளே தவிர, நிரந்தர ஏற்பாடு இல்ல. நிரந்தர ஏற்பாடு என் றால், ஏற்றுமதி வருமானத்தை இலங்கை அதிகரிக்க வேண்டும்.

ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்காவிட்டால், ஒன்றும் செய்ய இயலாது. தற்காலிக ஒட்டு வேலை தான். டொலர் கையிருப்பே இல்லை. 1500 கொள்கலன்கள் கூட விடுவிக்க முடியாமல் இருக்கின்றது. பெற்றோல், டீசல் இறக்குமதி செய்ய பணம் இல்லை.

இந்த பிரச்னையினால் மின்சாரத்தை துண்டிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. அரசாங்கத்திற்கு வேறு வழியே இல்ல. சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது, தூர நோக்கு இல்லாத பொருளாதார சிந்தனைகள் தான், இந்த பிரச்சினைக்கு காரணம். அன்றைக்கு அன்றைக்கு தேவைக்கேற்ற திட்டமிடுகிறார்கள்" என இரா.செல்வராஜா தெரிவிக்கின்றார்.

**பொருளாதார நிபுணரின் பார்வை**

"இலங்கை பொருளாதாரம் எதிர்காலத்தில் சீரழியுமா? வளர்ச்சி அடையுமா? இல்லை இதைவிட மேலும் கடனாளியாகலாமா? கடனிலிருந்து மீண்டெழுமா? நாடு வெளிநாட்டு சக்திகளின் பலப்பரீட்சை பிரதேசமாக மாறுமா? அல்லது சமாதான பூமியாக இருக்குமா? போன்ற பல கேள்விகளை எழுப்புவதாக பொருளாதார நிபுணர் பேராசிரியர் எஸ்.விஜேசந்திரன் தெரிவிக்கின்றார்.

உலக நாடுகளிடமிருந்து தொடர்ச்சியாக கடனை பெற்று, முழுமையாக கடனாளியாக மாறிய மெக்ஸிகோவை போன்றதொரு நிலைமையை, இலங்கை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறுகின்றார்.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் கடனை, எவ்வாறான திட்டங்களுக்கு பயன்படுத்துகின்றது என்பதே முக்கியமானது என கூறிய அவர், அது தொடர்பிலான சரியான தெளிவு கிடையாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடனை உற்பத்திக்கு பயன்படுத்தினால், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் குறைவடையும் என அவர் கூறினார்.

எனினும், வாங்கும் கடனை கொண்டு அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டால், அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யாது என அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொள்ளும் கடனானது, வீதி அபிவிருத்தி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

சர்வதேச நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடனானது, அதிக வட்டிக்கு வாங்கப்படுவதுடன், அதனை மீள செலுத்தும் காலம் குறுகியது என அவர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறான நிலைமை தொடருமானால், எதிர்காலத்தில் இலங்கை, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பலபரீட்சை பிரதேசமாக மாறும் நிலைமை ஏற்படும் என பொருளாதார நிபுணர் பேராசிரியர் எஸ்.விஜேசந்திரன் தெரிவிக்கின்றார்





ஆ.பழனியப்பன்

# தலிபான்களின் ஆட்சியில் ஆப்கானிஸ்தான் எப்படி உள்ளது?

தலிபான்களால் ஆட்சி செய்யப்படும் ஆப்கானிஸ்தானில் அரசு ஊழியர்களுக்குப் பல மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. அந்நாட்டின் காபூல், ஹெராட், மஸர் இ ஷரீஃப் உள்ளிட்ட வர்த்தக நகரங்கள் ஸ்தம்பித்துப்போயுள்ளன. இந்த நிலைமைக்குக் காரணம் என்ன?

தலிபான்களின் கோரப்பிடியில் சிக்கியிருக்கும் ஆப்கானிஸ்தான் மக்கள், கடும் வறட்சி, வேலையின்மை, வறுமை, பசி, பட்டினி, கொரோனா பெருந்தொற்று எனப் பல்முனைத் தாக்குதல்களுக்கு ஆளாகிவருகிறார்கள். இதுவரை சந்தித்திராத ஒரு மனித அவலத்தை ஆப்கானிஸ்தான் சந்தித்துக்கொண்டிருக்கிறது!

ஆப்கானிஸ்தானிலிருந்து வந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு செய்தியும் நம்மைப் பதைபதைக்கச் செய்கிறது. மூன்றே முக்கால் கோடி மக்கள்தொகை கொண்ட ஆப்கானிஸ்தானில், பசியும் பட்டினியும் தலைவிரித்தாடுகிறது. அங்கு, லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் பரிதவிக்கிறார்கள். போதுமான உணவுப்பொருள்கள் இல்லாததால், 98 சதவிகித மக்கள் மிகக் குறைந்த அளவு உணவை உட்கொண்டு உயிர்பிழைத்து வருகிறார்கள் என்று 'உலக உணவுத் திட்டம்' என்ற தன்னார்வ அமைப்பு கூறுகிறது.

தலிபான்களின் ஆட்சியில் அந்நாட்டு மக்களின் வாழ்க்கை மிகவும் கவலைக்குரியதாக மாறியிருக்கிறது. சர்வதேச ஊடகங்கள் பலவும் இந்த அவலநிலை குறித்துக் கவலை தெரிவித்துவருகின்றன.

தன் குழந்தைகளுக்கு உணவளிக்க முடியவில்லை என்பதால், தலைநகர் காபூலில் சில வாரங்களுக்கு முன்பு ஒரு தாய் தன் மூன்று குழந்தைகளை வீதியில் விட்டுவிட்டுப் போய்விட்டாள். அதே காபூலில், 'வாங்கிய கடனை மரியாதையாகத் திருப்பிக்கொடு. இல்லையேல் உன் வீட்டையே கொளுத்திவிடுவேன்' என்று மிரட்டிய நபரிடம், 'என்னிடம் பணம் எதுவுமில்லை. கடனுக்கு பதிலாக என் மகளை வைத்துக்கொள்ளுங்கள்' என்று தன் 7 வயது மகளை அனுப்பி வைத்திருக்கிறார் ஒரு கடனாளித் தந்தை.

இதுபோல பல ஜீரணிக்க முடியாத சம்பவங்கள் ஆப்கன் மக்களின் வறுமையை உலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன.

### அமெரிக்காவும் தலிபானும்தான் காரணம்!

ஆசிரியர்களாகப் பணியாற்றிய பலர் தற்போது துப்புரவுப் பணியாளர்களாகவும், தினக்கூலித் தொழிலாளிகளாகவும் மாறியிருக்கிறார்கள். அரசு அதிகாரிகள் பலர் வீதிகளில் பிச்சையெடுக் கிறார்கள். கிராமப்புற மக்கள் உணவுப்பொருள்கள் வாங்குவதற்காகச் சொத்துகளையெல்லாம் விற்கிறார்கள். குழந்தைகள் விற்பனையும், உடல் உறுப்புகள் விற்பனையும் அதிகரித்திருக்கிறது. 'ஆப்கானிஸ்தானின் இந்த நிலைக்குக் காரணம் அமெரிக்காவும் தலிபானும்தான்' என்று சாடுகின்றனர் அரசியல் நோக்கர்கள்.

நியூயோர்க் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்த அமெரிக்கா, கடந்த ஆண்டு அந்நாட்டிலிருந்து திடீரென வெளியேறியது. தற்போது, ஆப்கானிஸ்தான்மீது பொருளாதாரத் தடைகளை விதித்திருப்பதுடன், ஆப்கானிஸ்தான் ரிசர்வ் வங்கியின் 9.5 பில்லியன் அமெரிக்க டாலரை முடக்கிவைத்திருக்கிறது அமெரிக்கா. இதனால், ஆப்கானிஸ்தான் நாட்டின் பொருளாதாரம் நொறுங்கிப்போய், அந்த தேசம் பேரழிவைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தானிலிருந்து வந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு செய்தியும் நம்மைப் பதைபதைக்கச் செய்கிறது. மூன்றே முக்கால் கோடி மக்கள்தொகை கொண்ட ஆப்கானிஸ்தானில், பசியும் பட்டினியும் தலைவிரித்தாடுகிறது. அங்கு, லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் பரிதவிக்கிறார்கள்.

### பல மாதங்களாக சம்பளம் இல்லை

ஆப்கானிஸ்தான் அரசு ஊழியர்களுக்குப் பல மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. காபூல், ஹெராட், மஸர் இ ஷரீஃப் உள்ளிட்ட வர்த்தக நகரங்கள் ஸ்தம்பித்துப்போயுள்ளன. அங்குள்ள வர்த்தகர்களால் சர்வதேச அளவில் பரிவர்த்தனை செய்ய முடியவில்லை. இதனால், விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. அந்நாட்டு மக்கள் தங்கள் சேமிப்புகளை வங்கிக் கணக்கில் வைத்திருப்பது வழக்கம். ஆனால், மக்களின் வங்கிக் கணக்குகள் தற்போது முடக்கிவைக்கப் பட்டுள்ளன. கடந்த சில மாதங்களில் பல லட்சம் பேர் வேலையிழந்துள்ளனர். வரும் ஜூன் மாதத்தில் 70 லட்சம் பேர் முதல் 90 லட்சம் பேர் வரை அங்கு வேலையில்லாதவர்களாக இருப்பார்கள் என்று சர்வதேசத் தொழிலாளர் அமைப்பான ஐ.எல்.ஓ கூறுகிறது.

காபூலைக் கைப்பற்றியபோது "நாங்கள் மக்கள் சேவகர்கள், யாரையும் கொல்லமாட்டோம். ஆப்கன் மக்களுக்கு அமைதியான ஆட்சியைத் தருவோம்" என்ற தலிபான்கள், ஆட்சி அதிகாரம் முழுவதுமாகக் கைக்கு வந்ததும் தங்கள் ஆட்டத்தை ஆரம்பித்தனர். இசை மற்றும் திரைப்படங்களுக்குத் தடை விதித்தார்கள். பெண்கள் வேலைக்குச் செல்வதைத் தடைசெய்தார்கள்.

"விளம்பரங்களில் பெண்கள் தலை காட்டக் கூடாது" என்றார்கள். பெண் செய்தி வாசிப்பாளர்கள் தங்கள் முகத்தை மூடிக்கொண்டுதான் தொலைக்காட்சியில் செய்தி வாசிக்க வேண்டும். ஆண்களின் அனுமதி இல்லாமல் வீட்டை விட்டு பெண்கள் வெளியே செல்லக் கூடாது. தெருக்களில் தனியாகப் பெண்கள் செல்ல அனுமதி இல்லை. பெண் குழந்தைகளுக்கான பள்ளிகள் மூடப்பட்டன. பெண்கள் அமைச்சகம் மூடப்பட்டது. இப்படியான அடக்குமுறைகளால் பெரும்பாலான பெண்கள் வீட்டுக்குள் முடங்கிவிட்டார்கள். 'ஆப்கனை ஒரு நரகமாக மாற்றி வைத்திருக்கிறது தலிபாபன்' என்கின்றன சர்வதேச ஊடகங்கள்.

### இயற்கையும் வதைக்கிறது

அமெரிக்கா மற்றும் தலிபான்களுடன் சேர்ந்து இயற்கையும் அந்த மக்களை வதைத்துவருகிறது. கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் கடும் வறட்சி அங்கு நிலவுகிறது. கடுமையான பஞ்சம் ஏற்பட்டுள்ளது. குழந்தைகள் ஆபத்தான சூழலில் இருக்கிறார்கள். குடிநீர், ஊட்டச்சத்து, சுகாதாரம், மருத்துவம், பாதுகாப்பான இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகள் போதுமான அளவுக்கு இல்லாமல் குழந்தைகள் தவிக்கிறார்கள்.

ஊட்டச்சத்துக் குறைபாடு அபாயக் கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. போலியோ, தட்டம்மை போன்ற தடுப்பூசிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளின் தலைவர்களும், ஊடகத்தினரும் ஆப்கனின் நிலை குறித்துத் தொடர்ந்து கண்காணித்து, கவலை தெரிவித்துவருகின்றனர்.

இப்படியான சூழலில், அமெரிக்காவால் முடக்கப்பட்டுள்ள 9.5 பில்லியன் அமெரிக்க டாலர் கிடைத்துவிட்டால், நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்திவிடலாம் என்று நம்பிக்கொண்டிருக்கும் தலிபான்கள், அமெரிக்காவுக்குக் கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதிக் கெஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். மக்களோ செய்வதறியாது திகைத்துப் போயிருக்கிறார்கள். மத அடிப்படைவாதிகளிடம் சிக்கிய தேசத்தின் மக்கள், என்ன கதிக்கு ஆளாவார்கள் என்பதற்கு ஆப்கானிஸ்தான் ஒரு பாடம்!



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.**

i) காற்று வேகமாக வீசியதால் மரங்கள் ஒன்றுடன் ஒன்று உரசின. ( )

ii) மான் கூட்டம் சிதறி ஓடின. ( )

iii) மாணவர்கள் பாடசாலைச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் வழங்கினர். ( )

iv) தங்கை காலையில் விழித்தெழுவார்கள். ( )

**05) பின்வரும் தொடர்மொழிக்குரிய தனிச் சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

i) முனிவர்கள் வசிக்குமிடம் - ……………………………………………

ii) வீண் செலவு செய்பவன் - ……………………………………………

**06) பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

i) அவர் தம் கல்வியின் சிறப்புத் தான் என்னே

ii) அந்தப் பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன

**07) சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

| | | |
|---|---|---|
| i) நோயாலி | i) நோயாளி | i) நோயாழி |
| ii) சிகைக்காய் | ii) சீயாக்காய் | ii) சியக்காய் |
| iii) சவுக்காரம் | iii) சவர்க்காரம் | iii) சவக்காரம் |
| iv) ஆராட்சி | iv) ஆராய்சி | iv) ஆராய்ச்சி |

**08) பின்வரும் கருத்துக்களை விளக்கும் பழமொழிகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

i) சந்தர்ப்பத்தைத் தவறவிடாதே.

……………………………………………………………………

ii) வறுமையிலும் செம்மையாக வாழ்.

……………………………………………………………………

**09) பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.**

i) ஆசிரியர் எனக்குப் பரிசு குடுத்தார்.

……………………………………………………………………

ii) நான் தினமும் காலையில் தண்ணி குடிப்பன்

……………………………………………………………………

10) பின்வரும் பாடலடியைப் பூர்த்தி செய்க.

தாகம் ……………………………… நுங்கு
தண்ணீர் போல நுங்கு

11) பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

i) 

……………………………………

ii) 

……………………………………

12) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

i) Play ground ………………………………..

ii) Hospital ……………………………………

13) பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

i) drinking / am / I / water

……………………………………………………………………

ii) This / car / is / small / a

……………………………………………………………………

## விடைகள்

04) i) ✓
ii) ✗
iii) ✓
iv) ✗

05) i) ஆச்சிரமம் / ஆசிரமம்
ii) ஊதாரி

06) i) அவர் தம் கல்வியின் சிறப்புத்தான் என்னே!
ii) அந்தப் பாறையில் குரங்கு, மான், சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன.

07) i) நோயாளி
ii) சிகைக்காய்
iii) சவர்க்காரம்
iv) ஆராய்ச்சி

08) i) அலைமோதும் போதே தலை முழுகு / காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
ii) இரக்கப் போனாலும் சிறக்கப்போ

09) i) ஆசிரியர் எனக்குப் பரிசு கொடுத்தார்.
ii) நான் தினமும் காலையில் தண்ணீர் குடிப்பேன்

10) தீர்க்கும்

11) i) Ice cream
ii) Spoon

12) i) விளையாட்டு மைதானம்
ii) வைத்தியசாலை

13) i) I am drinking water
ii) This is a small car

---

## கல்வி tv CHANNEL-1

**03.02.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**03.02.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

### காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

# உண்மைகளை கண்டறிவதற்கே நீதியமைச்சர் வடக்குக்கு விஜயம்!

### அரசாங்க பேச்சாளர் ரமேஷ் பத்திரண

**கொழும்பு, பெப். 03**

**காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான உண்மைகளை கண்டறிந்து தீர்வு காண்பது நீதியமைச்சரின் வடக்கு விஜயத்தில் ஒரு முக்கிய விடயமாக உள்ளது. காணி விவகாரங்கள் உள்ளிட்ட ஏனைய சட்ட நடவடிக்கைகளை போன்று காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் குறித்து அரசாங்கம் கவனத்தில் கொண்டுள்ளது.**

ஆனால், இந்த விடயத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடுகள் இருக்காது என அமைச்சரவை பேச்சாளர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கொழும்பில் திங்களன்று விசேட நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் முறையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்நிலையில், பிரகீத் எக்னலிகொட உள்ளிட்ட ஊடகவியலாளர்களுக்கு நடந்தது என்ன, கெஹலிய ஊடகத்துறை அமைச்சராக இருந்தபோது சமூகவலைத்தளங்களின் சுதந்திரத்தை முடக்கும் நிலைப்பாடு காணப்பட்டமை தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன என்று எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

“கருத்து சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் ஒழுங்குமுறையுடன் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. இதில் எவ்வித தடைகளோ அல்லது புதிய சட்ட விதிமுறைகளோ நடைமுறைப்படுத்தப் படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அது தொடர்பான அலுவலக நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நீதித்துறை அமைச்சர் அலி சப்ரி முன்னெடுத்து வருகின்றார்.

இதற்கமைய நீதி அமைச்சரின் வடக்கு விஜயத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான உண்மைகளை கண்டறிந்து தீர்வு காண்பது முக்கியமான விடயமாகவுள்ளது. மேலும் காணி விவகாரங்கள் உள்ளிட்ட ஏனைய சட்ட நடவடிக்கைகளை போன்று காணாமலாக்கப்பட்டோர் விடயம் குறித்து அரசாங்கம் கவனத்தில் கொண்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இது தொடர்பிலான நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை - என்றார். (ஐ)

# தென்கிழக்கு பல்கலைகழகத்தின் பட்டமளிப்பு 7ஆம் திகதி ஆரம்பம்!

அக்கரைப்பற்று, பெப். 03

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் இம்மாதம் 07 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை இடம்பெறும்.

தொடர்ச்சியாக 4 நாட்களுக்கு 8 அமர்வுகளாக பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் மொத்தமாக 2,621 பேர் இதன்போது பல துறைகளிலும் பட்டங்களைப் பெறவுள்ளனர் என்று இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், 1ஆம் அமர்வில் பிரயோக விஞ்ஞானங்கள் பொறியியல் பீடத்தை சேர்ந்த 475 பேரும், 2ஆம் அமரவில் கலைப் பீடத்தை சேர்ந்த 219 பேரும் 3ஆம் அமர்வில் கலைப்பீடத்தை சேர்ந்த 348 பேரும், 4ஆம் அமர்வில் இஸ்லாமியக் கற்கைகள் அறபு மொழி பீடத்தினைச் சேர்ந்த 329 பேரும், 5 ஆம் அமரவில் இஸ்லாமியக் கற்கைகள் அரபு மொழி பீடத்தை சேர்ந்த 313 பேரும் 6ஆம் அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தை சேர்ந்த 277 பேரும், 7ஆம் அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தைச் சேர்ந்த 348 பேரும் 8 ஆம் அமர்வில் கலை, கலாசார பீட மற்றும் முகாமைத்துவ வர்த்தக பீடங்களின் 312 வெளிவாரி மாணவர்கள் தமது பட்டங்களைப் பெறவுள் ளனர்.

இந்த பட்டமளிப்பு விழாவில் 4 பேர் முதுதத்துவமாணி பட்டங்களையும், 23 பேர் வியாபார நிருவாக முதுமாணி பட்டங்களையும், 02 பேர் முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவையும் பெறவுள்ளனர். அத்துடன், பேராதனை பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் பேராசிரியர் எஸ். தில்லை நாதன் மற்றும் முன்னாள் பதிவாளர் ஜௌபர் சாதிக் ஆகியோருக்கு கௌரவ கலாநிதிப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த பட்டமளிப்பு விழா நிகழ்வின் முதல் நாளன்று கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவும், இரண்டாவது நாளன்று உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸும், மூன்றாவது நாளன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்கவும், இறுதி நாளன்று ருகுணை பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் காமினி சேனாநாயக்க ஆகியோர் விசேட அழைப்பாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர் - என்றார்.

மேலும் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் ஒவ்வொருவரும் தடுப்பூசி பெற்றமைக்கான அட்டையையும் கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (ஐ)




## “தேசமே” காணொலி பாடல் வெளியீடு

கொழும்பு, பெப்.3

நடிகரும் இயக்குநரும் ஊடகவியலாளருமான ஜுனைத் றிஸ்வானின் இயக்கத்தில் உருவாகியுள்ள “தேசமே” காணொலி பாடல், சுதந்திர தினத்தன்று வெளியிடப்படவுள்ளது.

இந்த காணொலி பாடலின் முதல் பார்வை, டான் தொலைக் காட்சி குழுமத் தலைவர் எஸ். எஸ். குகநாதனினால் முகநூலில் வெளியிடப்பட்டது.

இந்தக் காணொலி பாடலுக்கான இசையமைப்பை கே. சிவகரன், வழங்கியுள்ளார். என். லுக்மானுள் ஹக்கீம் பாடலை பாடியுள்ளார்.

பாடலுக்கான வரிகளை எஸ். ஏ. சி. மரிக்கார் எழுதியுள்ளார். எஸ்.நிதர்சன் படத்தொகுப்பை செய்துள்ளதுடன் டிலான், உமைர் நவ்ஸாட், பிரகாஷ் குமார் ஆகியோர் ஒளிப்பதிவு செய்துள்ளனர். எஸ்.செந்தூரன் உதவி இயக்குநராக பணியாற்றியுள்ளார்.

# கிழக்கு பொது சேவைக்கு புதிய செயலர் நியமனம்!

திருகோணமலை, பெப். 03

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக மூத்ததம்பி கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு செட்டிப் பாளையத்தை சேர்ந்த இவர் 1995ஆம் ஆண்டு இந்தக் கிராமத்திலிருந்து மூன்றாவது நிர்வாக சேவை அதிகாரியாக தெரிவானார்.

மட்டக்களப்பு செட்டி பாளையம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர், கலைமாணி பட்டத்தினை பேராதனை பல்கலைக்கழகத்திலும் பொதுநிருவாக துறையில் முதுமாணிப் பட்டத்தை இந்திய பல்கலைக் கழகத்திலும் பெற்றார்.

இவர் தம்பலகாமம், ஏறாவூர் நகரம், பட்டிப்பளை, கல்முனை மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும் குச்சவெளி, நாவிதன்வெளி, திருக்கோயில் மற்றும் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும், திறைசேரி முகாமைத்துவ திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகவும் தற்போது கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளராகவும் கடமை புரிகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தொழிலாளரின் சொத்துக்களை கொள்ளையடிக்க இடமளியேன்!

### வடிவேல் சுரேஸ் எம்.பி

கொழும்பு, பெப். 03

“நான் உயிரோடு இருக்கும் வரை இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் காரியாலயம் மற்றும் சொத்துக்களை கொள்ளையடிப்பதற்கு இடமளிக்க மாட்டேன்” என்று, பாராளுமனற் உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கொழும்பு ராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமை காரியாலயத்தையும் அதற்கு உரித்தான சொத்துக்களையும் கொள்ளையடிக்கும் நோக்குடன் இதற்கு முன்னரும் ஒரு சிலர் அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து இங்குள்ள பொருட்களுக்கு சேதத்தை ஏற்படுத்தி சென்றார்கள்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்து இருக்கின்றோம். இவ்விடயம் தொடர்பான சி. சி. ரீ. வி. காணொலியையும் பொலிஸாருக்கும் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

இருந்தபோதிலும் அது தொடர்பில் எவ்விதமான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மாநில உத்தியோகத்தர்களுக்கான கூட்டம், சங்கத்தின் காரியாலயத்தில் நடைபெற இருந்த சந்தர்ப்பத்தில், இந்தக் கலந்துரையாடலை குழப்பும் நோக்கில் ஒரு சிலர் அத்துமீறி சங்கத்துக்குள் நுழைந்து சங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்பட்டுள்ளனர்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று இருக்கும் சூழ்நிலையில், சங்கத்தின் யாப்பின் பிரகாரம் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாம் என்ற தீர்ப்புக்கு அமைய நாம் சங்கத்தின் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கின்ற சூழ்நிலையில், சங்கத்தின் சொத்துக்களை சூறையாடும் நோக்கில் நயவஞ்சக செயற்பாடுகளில் ஒரு சிலர் சட்டத்தை மீறி செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றனர்.

எது எவ்வாறாக இருந்த போதிலும் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு சொந்தமான இந்த இடத்தையும் காணியையும் அவர்களுடைய உரிமைகளையும் கொள்ளையடிக்கும் நோக்குடனும் செயல்படுகின்ற எந்த ஒரு கூட்டத்துக்கும் நான் உயிரோடும் இருக்கும்வரை இந்த சங்கத்துக்குள் உள்நுழைய அனுமதி இல்லை என்பதோடு இந்த சங்கத்தின் சொத்துக்கள் உடைமைகள் அனைத்தும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டுமே உரியது என்றும் அவர் மேலும் கூறி னார். (ஐ)

# பெரும்போக அறுவடை அம்பாறையில் ஆரம்பம்!

அக்கரைப்பற்று, பெப். 03

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பமாகியிருக்கிறது. நெல்லின்விலை அதிகரித்துள்ள போதிலும் நெற்செய்கைக்கான செலவும், அறுவடை இயந்திரத்திற்கான கூலியும் அதிகரித்துள்ளது. கடந்தபோகத்தில் ஏக்கருக்கு 6000 ரூபாய் அறவிடப்பட்ட நிலையில் இம்முறை 8 ஆயிரம் ரூபாய் அறவிடப்படுகின்றது.

இதேவேளை, போதிய உரங்கள் இன்மையால் இம்முறை ஏக்கருக்கு கிடைக்கும் நெல்லின் அளவு பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. 70 மூடைகள் கிடைத்த நிலையில் இம்முறை 35 மூடை நெல்லே கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

எனினும், ஒரு மூடை நெல் வெட்டியவுடன் 4 ஆயிரத்து 700 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# உக்ரைனுடன் போருக்கு ரஷ்யாவை வலிந்து தள்ள அமெரிக்கா முயற்சி!

## விளாடிமிர் புடின் குற்றச்சாட்டு

மொஸ்கோ, பெப். 03

உக்ரைனுடன் போர் புரியும் சூழலுக்கு ரஷ்யாவை வலிந்து தள்ள அமெரிக்கா முயற்சிப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பல வாரங்களாக நீடித்து வரும் உக்ரைன் - ரஷ்யா நெருக்கடி நிலை குறித்து முதன்முதலாக கருத்து வெளியிட்டுள்ள புடின், ரஷ்யா மீது அதிக தடைகளை விதிக்க ஒரு சந்தர்ப்பமாக இந்த நெருக்கடியை பயன்படுத்துவதே அமெரிக்காவின் குறிக்கோள் என்று தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் நேட்டோ கூட்டணிப் படைகள் குறித்த ரஷ்யாவின் கவலைகளை அமெரிக்கா புறக்கணிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

உக்ரைன் எல்லைப் பகுதியில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தனது படைகளை ரஷ்யா குவித்துள்ளது. அத்துடன், அங்கு கனரக ஆயுதங்களும் குவிக்கப்பட்டுள்ளன.

சோவியத் யூனியன் கடந்த 1991 ஆம் ஆண்டில் சிதறுண்டபோது அதில் அங்கமாக இருந்த உக்ரைன் தன்னை சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்டது.

சுமார் 30 சதவீதத்தினர் ரஷ்ய மொழி பேசும் அந்த நாட்டில் ஐரோப்பிய செல்வாக்கு அதிகரித்துவிடக் கூடாது என்பதில் ரஷ்யா உறுதியாக உள்ளது. நேட்டோ அமைப்பில் உக்ரைனை உறுப்பினராக இணைக்கக் கூடாது என்றும் உக்ரைனில் நேட்டோ நிலைகள் அமைக்கப்படக் கூடாது என்றும் ரஷ்யா திட்டவட்டமாக கூறி வருகிறது.

ஐரோப்பிய ஆதரவு உக்ரைன் அரசை எதிர்த்து கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கடந்த 2014 ஆம் ஆண்டு போரிட்டனர்.

ரஷ்ய இராணுவ உதவியுடன் அவர்கள் கிழக்கு உக்ரைனின் டோனட்ஸ்க், லுஹான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளை கைப்பற்றினர்.

அப்போது, உக்ரைனின் அங்கமாக இருந்த கிரீமியா மீது படையெடுத்த ரஷ்யா, அந்த தீபகற்பத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டது.

கிரிமியாவைக் கைப்பற்றி 8 ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னர், தற்போது உக்ரைன் மீது படையெடுக்க ரஷ்யா தயாராகி வருவதாக அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. எனினும் இக்குற்றச்சாட்டுகளை ரஷ்யா தொடர்ந்து மறுத்து வருகிறது.

இந்நிலையிலேயே உக்ரைனுடன் போர் புரியும் சூழலுக்கு ரஷ்யாவை வலிந்து தள்ள அமெரிக்கா முயற்சிப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பனுடன் மொஸ்கோவில் நேற்று பேச்சு வார்த்தை நடத்திய பின்னர் கருத்து வெளியிட்ட புடின், அமெரிக்கா உக்ரைன் குறித்து பெரிதாக அக்கறை காட்டவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ரஷ்யாவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதுதான் அதன் முக்கிய நோக்கம். இந்த இலக்கை அடைவதற்கான ஒரு கருவியாக உக்ரைன் விவகாரத்தைப் பயன்படுத்த முயற்சிக்கிறது எனத் தெரிவித்தார்.

பெரும் வல்லரசுகளாக உள்ள ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பனிப்போர் 1947 ஆம் ஆண்டு முதலே நீடித்து வருகிறது. அப்போதைய கம்யூனிச சோவியத் ஒன்றியத்தின் முக்கியமான பகுதியாக உக்ரைன் இருந்தது.

பின்னர் சோவியத் ஒன்றியம் பிளவுபட்டபோது உக்ரைன் தன்னை தனி நாடாக அறிவித்துக் கொண்டது. அத்துடன், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் உக்ரேன் நட்புறவை பேணி வருகிறது.

இவ்வாறான நிலையில் உக்ரைனை நேட்டோ கூட்டணியில் இணைக்கும் முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. அவ்வாறு இணைக்கப்பட்டால் அது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறும் என ரஷ்யா கவலை கொண்டுள்ளது. இதுவே ரஷ்யாவின் மிரட்டல்களுக்கு காரணமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)



## கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்தியது டென்மார்க் அரசு!

கொப்பன்கேஹன், பெப். 03

ஐரோப்பிய நாடுகளில் முதல் முறையாக கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து கட்டுப்பாட்டுகளையும் டென்மார்க் விலக்கிக் கொண்டுள்ளது.

கடந்த வாரங்களில் தினசரி கொரோனா தொற்று 50 ஆயிரத்தைக் கடந்ததுள்ளது.

எனினும், புதிய வகை ஒமிக்ரோன் வகை கொரோனாவினால் நோயாளிகளின் உடல்நிலை அதிக அளவில் மோசமடையவில்லை. எனவே, மருத்துவமனைகளில் பணிச் சுமையும் அதிகரிக்கவில்லை.

எனவே, கொரோனா தொற்றை இனியும் சமூக அச்சுறுத்தல் நிறைந்த நோயாகக் கருதத் தேவையில்லை என டென்மார்க் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, நோய் பரவல் கட்டுப்பாட்டு விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## கையுறை, ஊசி சிறிஞ்ச், ரெஸ்ற்-கிட் மலைபோலப் பிளாஸ்ரிக் கழிவுகள்!

### கொரோனா ஏற்படுத்தும் புதிய சவால் எச்சரிக்கிறது உலக சுகாதார நிறுவனம்

பரிஸ், பெப். 03

கொரோனா பெருந் தொற்று நோயின் விளைவாக உலகம் முழுவதும் சுகாதாரப் பாவனைப் பொருள்களின் கழிவுகள் மலைபோன்று பெருகி வருகின்றன. அதனால் உயிரினங்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் பெரும் தீங்கு உருவாகலாம் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கிறது.

கையுறைகள், மாஸ்க், தடுப்பூசி மருந்து ஏற்றும் சிறிஞ்சுகள், சுய வைரஸ் பரிசோதனைக் கருவிகள் என்று கொரோனா வைரஸுடன் தொடர்புடைய பல மருத்துவக் கழிவுப் பொருள்கள் - அவற்றில் பெரும்பாலானவை பிளாஸ்ரிக் பொருள்கள் - மிகப் பெரும் தொன் கணக்கில் குவிந்து வருகின்றன.

மிகவும் பின் தங்கிய நாடுகள் தொற்று நோயைச் சமாளிக்க உதவுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் கடந்த 2020 மார்ச் முதல் 2021 நவம்பர் வரையான காலப்பகுதியில் மட்டும் கப்பல்கள் மூலம் அனுப்பப்பட்ட சுய சுகாதாரப் பாதுகாப்புப் பொருள்களின் மொத்த எடை 87 ஆயிரம் தொன்கள் ஆகும். அவற்றை மதிப்பீடு செய்துள்ள சுகாதார நிறுவனம், அதில் 140 மில்லியன் வைரஸ் சோதனைக் கருவிகள் அடங்கும் என்று தெரிவித்துள்ளது. பிளாஸ்ரிக்கை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட அவற்றினால் மொத்தம் 2ஆயிரத்து 600 தொன் பிளாஸ்ரிக் கழிவுகளும் ஏழு லட்சத்து 31ஆயிரம் லீற்றர் இரசாயனக் கழிவுகளும் உருவாகும் எனத் தெரிவித்துள்ளது. அதே காலப்பகுதியில் உலகெங்கும் எட்டு பில் லியன் தடுப்பு மருந்து டோஸ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் சிறிஞ்சுகள் ஊசிகள் என்பன அடங்கலாக மேலும் ஒரு லட்சத்து 44 ஆயிரம் தொன் கழிவுகள் சேரும் என்றும் சுகாதார நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

இது ஐ. நாவால் அனுப்பப்பட்ட மருத்துவ உதவிப் பொருள்களது கழிவுக் கணக்கு மட்டுமே என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கும் சுகாதார நிறுவனம், உண்மையில் உலகெங்கும் பயன்படுத்தப்படுகின்ற பொருள்களின் கழிவுகள் இவற்றைவிடப் பல்பல மடங்குகள் அதிகமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளது. பொதுவாக இந்தப் பிளாஸ்ரிக் மருத்துவக் கழிவுப் பொருள் களில் 97 வீதமானவை எரியூட்டப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

கொரோனாவுடன் தொடர்புபட்ட இந்த மருத்துவக் கழிவுகள் உலகெங்கும் கழிவு அகற்றல் முகாமைத்துவத்தில் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளன.

பின்தங்கிய நாடுகளின் மருத்துவமனைகளும் சுகாதார நிலையங்களும் முறைப்படியான கழிவு அகற்றல் முகாமைத்துவத்தைக் கொண்டிருக்காத காரணத்தால் அந்நாடுகளில் அவற்றால் பெரும் சுகாதார மற்றும் சுற்றுச் சூழல் சீர்கேடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்றும் ஐ. நா. எச்சரிக்கை செய்துள்ளது.

மருத்துவக் கழிவுகளை அகற்றும் வழிமுறைகள் தொடர்பான விளக்கங்களை சுகாதார நிறுவனம் ஏற்கனவே வெளியிட்டிருக்கிறது.

பயன்படுத்திய பின் கண்டபடி வீசப்படுகின்ற மாஸ்க்குகளால் பறவைகள், நீர் வாழ் விலங்குகள் பாதிக்கப்படுவது பற்றிய செய்திகளும் படங்களும் ஏற்கனவே வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ)



## சிகரெட் துண்டுகளை சேகரிப்பதற்கு காகங்களை பயன்படுத்தும் சுவீடன்!

ஸ்ரொக்கோம், பெப். 03

சுவீடன் நகரத்தின் தெருக்களிலும் சதுக்கங்களிலும் வீசியெறியப்பட்ட சிகெரெட் துண்டுகளை சேகரிக்கும் பணியில் காகங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

செலவைக் குறைக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு சிகரெட் துண்டையும் சேகரித்து அதற்கான இயந்திரத்தில் போடும்போது காகங்களுக்குக் கொஞ்சம் உணவு கொடுக்கப்படும்.

கோர்விட் கிளீனிங் எனும் நிறுவனம் அந்தப் புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

சுவீடனின் தெருக்களில் ஆண்டுதோறும் சுமார் 1 பில்லியன் சிகரெட் துண்டுகள் வீசியெறியப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

காகங்களைக் களமிறக்குவதால், சுவீடன் நகரில் சிகெரெட் துண்டுகளை அகற்றும் செலவில் குறைந்த பட்சம் 75 விழுக்காடு சேமிக்க முடியும் என்று கோர்விட் கிளீனிங் நிறுவனம் கூறுகிறது.

அத்தகைய வேலையை செய்வதற்கு நியூ கலிடோனியன் வகைக் காகங்கள் பொருத்தமானவை என்று ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

அவற்றுக்குக் கற்றுக்கொடுத்துப் பழக்குவது எளிது என்றும் அவை தவறுதலாக குப்பைகளை உண்ணும் அபாயம் குறைவு என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## புதிய உலக சாதனை படைத்தது மின்னல்

ஜெனிவா, பெப். 03

கடந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி அமெரிக்காவின் தென் பகுதி வானில் வெளிப்பட்ட ஒரு மின்னலின் பதிவு புதிய உலக சாதனை படைத்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இந்த மின்னலின் தூரம் லண்டன் நகரில் இருந்து ஜேர்மனியின் ஹாம்பர்க் நகரம் வரையான தூரத்துக்கு சமமானது என அளவிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மிசிசிப்பி, லூசியானா மற்றும் டெக்சாஸ் முழுவதும் 770 கிலோமீற்றர் தூரம் இந்த மின்னல் தெரிந்ததாகவும் ஐ.நாவின் உலக வானிலை அமைப்பு ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 2018 ஒக்ரோபர் 31 ஆம் திகதியன்று தெற்கு பிரேசில் பகுதியில் பதிவான ஒரு மின்னலின் தூரத்தை விட 60 கிலோமீற்றர்கள் அதிகமாக அமெரிக்க மின்னல் பதிவாகி உள்ளது.

இது இயற்கை நிகழ்வுகளின் அசாதாரண பதிவுகள் என ஐ.நா. வானிலை மற்றும் காலநிலை அதிகாரி ராண்டால் செர்வெனி தெரிவித்துள்ளார். மின்னலின் நீளம் மற்றும் கால அளவைக் கண்டறிய பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் சமீபத்திய ஆண்டு களில் வியத்தகு முறையில் மேம்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# இளையோர் உலகக் கிண்ணம் இறுதிபோட்டியில் இங்கிலாந்து!

பார்படோஸ், பெப். 03

பரபரப்பான அரையிறுதி போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை வீழ்த்தி 24 வருடங்களுக்கு பின்னர் முதன் முறையாக இங்கிலாந்து அணி இறுதிப் போட்டிக்கு நுழைந்துள்ளது.

இளையோருக்கான கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், முதல் அரையிறுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியும், இங்கிலாந்து அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. மழை காரணமாக போட்டி 47 ஓவராக குறைக்கப்பட்டது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 47 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 231 ஓட்டங்கள் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரர் ஜோர்ஜ் தோமஸ் அரைச் சதம் டித்து ஆட்டமிழந்தார். இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் 6 விக்கெட்டுக்கு 136 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கடைசி கட்டத்தில் ஜோடி சேர்ந்த ஜோர்ஜ் பெல், அலெக்ஸ் ஹோர்டன் ஜோடி அரைச் சதமடித்தது. பெல் 56 ஓட்டங்களும், ஹோர்டன் 53 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.




மீண்டும் மழை பெய்ததால் 231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது. அந்த அணியில் அல்லா நூர் 60 ஓட்டங்களும், முகமது இஷ்டாக் 43 ஓட்டங்களும் எடுத்தனர். ஹாதி 37 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.

இறுதியில், ஆப்கானிஸ்தான் அணி 47 ஓவரில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 215 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் இங்கிலாந்து 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இங்கிலாந்து சார்பில் ரெஹான் அகமது 4 விக்கெட்களும், தோமஸ் அஸ்வின்வால் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.



## நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட்! தென்னாபிரிக்காவில் கீகன் இல்லை!

கேப்டவுன், பெப். 03

இந்தியா- தென்னாபிரிக்கா அணிகள் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் மோதின. சொந்தமண்ணில் நடந்த இந்தத் தொடரை தென்னாபிரிக்கா 2-1 எனக் கைப்பற்றியது.

தென்னாபிரிக்காவின் இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் கீகன் பீற்றர்சனின் துடுப்பாட்டமே. அவர் 6 இனிங்ஸில் 276 ஓட்டங்களை அடித்தார். சராசரி 46 ஆகும். இதனால் தொடர் நாயகன் விருதை வென்றார்.

இந்த நிலையில் தென்னாபிரிக்கா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான தென்னாபிரிக்கா அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீகன் பீற்றர்சன் இடம்பெறவில்லை.

அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் நியூசிலாந்து தொடருக்கான அணியில் சேர்க்கப்படவில்லை என தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட போதிலும், அறிகுறி ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்குப் பதிலாக ஜுபாய் ஹம்சா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இரண்டு டெஸ்ட் போட்டிகளும் கிறிஸ்ட்சர்ச்சில் நடக்கிறது. முதல் போட்டி வரும் 17ஆம் திகதி தொடங்கும் நிலையில், 2ஆவது போட்டி 27ஆம் திகதி தொடங்குகிறது. (ஐ)

## ஐ. பி. எல். ஏலத்தில் ஆர்ச்சருக்கு இடம்!

### குழப்பத்தில் அணிகள்


புதுடில்லி, பெப். 03

ஐ. பி. எல். ஏலப்பட்டியலில் இங்கிலாந்தின் சகல துறை வீரர் ஜோப்ரா ஆர்ச்சர் இடம்பிடித்தாலும் இந்த வருடம் விளையாட மாட்டார் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத் தொடக்கத்தில் இந்தியாவுக்கு எதிரான இரு டெஸ்ட், 5 இருபது - 20 போட்டிகளில் விளையாடிய ஜோப்ரா ஆர்ச்சர், வலது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக நாடு திரும்பினார். இதைத் தொடர்ந்து ஐ. பி. எல். தொடரிலிருந்தும் விலகினார்.

சத்திரசிகிச்சை செய்துகொண்ட அவர் கடந்த அவர் இந்த ஆண்டு ஐ. பி. எல். தொடரிலும் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது வெளியிடப்பட்டுள்ள ஏலப்பட்டியலில் ஆர்ச்சரின் பெயர் இடம்பெற்றுள்ளது. ஏனெனில், அவரை அடுத்த இரு ஆண்டுகளுக்கு தக்க வைக்க முடியும் என்பதாலேயே அவரின் பெயர் ஏலப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

ஏலத்தில் எந்த அணி ஆர்ச்சரைத் தேர்வு செய்தாலும் அவர் விளையாடாவிட்டால் மாற்று வீரரைத் தேர்வு செய்யமுடியாது. ஆனால், அடுத்த இரு வருடங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தக் குழப்பமான நிலையில் ஆர்ச்சரை எந்த அணி தேர்வு செய்யும் என்பது ரசிகர்களுக்கு ஆச்சர்யமாகவே உள்ளது.



ஆர்ச்சரைப் பெரிய தொகைக்குத் தெரிவு செய்தாலும் இந்த வருடம் அவர் விளையாட மாட்டார். அவரைத் தெரிவு செய்தால் கைவசமுள்ள பணமும் குறைந்து விடும். பிறகு நினைத்த வீரர்களை ஏலத்தில் தெரிவு செய்ய முடியாது. ஒருவேளை அடுத்த வருடமும் ஆர்ச்சரால் ஐ. பி. எல்லில் விளையாட முடியாமல் போனால் இந்த வருடம் காத்திருந்தது வீணாகிவிடும். இந்த நிலையில் ஆர்ச்சரைத் தெரிவு செய்ய அணிகள் எந்தளவுக்குத் தயாராக இருக்கும் எனத் தெரியவில்லை.

## அனைத்து ஐ. பி. எல்லிலும் விளையாடிய ஒரே வீரர்!

புதுடில்லி, பெப். 03

கடந்த 14 தொடர்களிலுமம் விளையாடிய வெளிநாட்டு வீரர்கள் நால்வர் தான். ஏபி டி வில்லியர்ஸ், கிறிஸ் கெயில், ஷோன் மார்ஷ், டுவைன் பிராவோ.

இந்த நால்வரில் டி வில்லியர்ஸ், கெயில், ஷான் மார்ஷ் ஆகிய மூவரும் இந்த வருட ஐ. பி. எல். தொடரில் விளையாடவில்லை. ஏலப் பட்டியலிலும் அவர்களின் பெயர் இல்லை.

இதனால் 15 ஐ. பி. எல். தொடர்களிலும் இடம் பெற்ற ஒரே ஒரு வெளிநாட்டு வீரர் என்ற பெருமையை மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த டுவைன் பிராவோ பெற்றுள்ளார். இந்தமுறை ஏலப் பட்டியலில் பிராவோவின் பெயர் இடம்பெற்றுள்ளது. அடிப்படை விலை - 2 கோடி இந்திய ரூபாய்.

ஐ. பி.எல். தொடரில் மும்பை, குஜராத், சென்னை ஆகிய அணிகளில் பிராவோ விளையாடியுள்ளார். ஏலத்தில் சென்னை உட்பட பல அணிகள் பிராவோவைத் தேர்வு செய்ய ஆர்வம் காண்பிக்கும் எனத் தெரிகிறது.



# ரபிட் அன்ரிஜென், பி.சி.ஆர் உபகரணங்கள் தட்டுப்பாடு

## உப்புல் ரோஹண சுட்டிக்காட்டு



**கொழும்பு, பெப். 03**

**கொரோனா தொற்றை பரிசோதிக்கும் ரபிட் அன்ரிஜென் மற்றும் பி.சி.ஆர் உபகரணங்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உப்புல் ரோஹண தெரிவித்துள்ளார்.**

சுகாதார அமைச்சு நாளாந்தம் வெளியிடும் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதைவிட பல மடங்கு அதிகம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த கோவிட் அலை தற்போது உருவாகி கொண்டிருக்கிறது. பாடசாலைகளுக்கிடையில் வைரஸ் வேகமாக பரவி வருவதையும் பொது சுகாதார பரிசோதகர்கள் அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கர்ப்பிணிப் பெண்களை கடமைக்கு வரும்படி பணித்துள்ளதால் அவர்களினல் பெரும்பாலானோருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். (அ)



# வீடொன்றின் மீது தாக்குதல் மூவர் பொலிஸாரால் கைது

*யாழ்ப்பாணம், பெப். 03*

கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது தாக்குதல் நடத்தியவர்களில் மூவரை விரைந்து செயற்பட்ட கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த குழு ஒன்று கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் அத்துமீறி நுழைந்து தாக்குதலை நடத்தியது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல்வழங்கப்பட்டதையடுத்து சி.சி.ரி.வி. காட்சிகளை அடிப்படையாக வைத்து விரைந்து செயல்பட்ட கோப்பாய் பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் யாழ் வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவம் காதல் விவகாரம் காரணமாக இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-03)

# போதைப் பொருள் கடத்தல் கொழும்பில் வீடுகளுக்கு 'சீல்'

*கொழும்பு, பெப் 3*

கொழும்பு தெமட்டகொடையில் இரு வீடுகளுக்கு சீல் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹெரோய்ன், ஐஸ் உள்ளிட்ட பெருந்தொகை போதைப் பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய தெமட்டகொடை ருவான் என அழைக்கப்படும் ருவான் சமில பிரசன்னவுக்கு சொந்தமான இரண்டு சொகுசு வீடுகளுக்கே சீல் வைப்பதற்கான உத்தரவு பெறப்பட்டுள்ளது.

சட்டவிரோத சொத்துக்கள் அல்லது சொத்து விசாரணைப் பிரிவு இதற்கான உத்தரவைப் பெற்றுள்ளது.

குற்றம் மற்றும் போதைப் பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்த பணத்தைக் கொண்டு இந்த இரண்டு சொகுசு வீடுகளையும் தனது மனைவியின் பெயரில் தெமட்டகொடை ருவான் வாங்கியுள்ளார்.

இந்த வீடுகள் இரண்டும் ரூபாய் 3 கோடி 46 இலட்சத்துக்கும் மேல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(கே)

# ஊடகவியலாளர் மீது தாக்ககுதல் சந்தேகத்தில் ஒருவர் கைதானார்

*யாழ்ப்பாணம், பெப். 03*

சாவகச்சேரியில் ஊடகவியலாளரை தாக்கி காயப்படுத்தி, உயிர் அச்சுறுத்தல் விடுத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

கடந்த 31ஆம் திகதி திங்கட்கிழமை மதியம் கடமை முடித்து சாவகச்சேரி கச்சாய் வீதியால் வீடு திரும்பிய ஊடகவியலாளரை வானில் வந்தவர்கள் மோத முற்பட்டதுடன், அவரைத் தாக்கி காயப்படுத்தியிருந்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் மற்றும் அதன் சாரதி மீதும் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 2,377 வாகன விபத்துக்களில் 2,473 பேர் பலி

*கொழும்பு, பெப். 03*

கடந்த ஆண்டு இடம்பெற்ற வாகன விபத்துகளில் 2,473 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 5,474 பேர் பலத்த காயமடைந்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டு 2,377 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

# மேலும் 471 பேர் குணமடைவு!

*கொழும்பு, பெப். 03*

கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 471 பேர் பூரணமாக குணமடைந்த வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய, கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 579,320 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 612,322 அதிகரித்துள்ளது. (அ)

# தேவையற்ற பயணங்களை வார இறுதியில் தவிர்க்கவும்

## சுகாதார அதிகாரிகள் கோரிக்கை

*கொழும்பு, பெப். 03*

கோவிட் -19 தொற்று நோயானது தொடர்ந்து அதிகரித்து வருவதால், நீண்ட வார இறுதியில் அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு சுகாதார அதிகாரிகள் பொது மக்களை வலியுறுத்தியுள்ளனர்.

ஒமைக்ரோன் பிறழ்வு சமூகப் பரவல் வீதத்தில் உள்ளதா இல்லையா என்ற கேள்விக்கு, 'சமூக பரவல்' என்ற வார்த்தையின் வரையறையின்படி அதை சரியாக உறுதிப்படுத்த முடியாது என சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகமான வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

பிறழ்வு அந்த நிலையை அடைந்திருந்தால், பொதுமக்கள் தங்கள் நடத்தையில் கவனமாக இருக்கவேண்டும்.

இதேவேளை, தற்போது யாரும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரான வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

மேலும் முகக்கவசம் அணிவதைத் தவிர, ஏனைய சுகாதார வழிகாட்டல்கள் தற்போது பின்பற்றப்படவில்லை, இது நிச்சயமாக எதிர்வரும் மாதங்களில் கோவிட் 19 தொற்றாளர்களின் அதிகரிப்பு வழிவகுக்கும்.

சுகாதார வழிகாட்டல்களை அனைவரும் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவதுடன், தற்போதைய நிலைமை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு தடுப்பூசிகளை ஊக்குவிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒமைக்ரோன்பிறழ்வால் பாதிக்கப்பட்டவர்களுக்கு டெல்டா பிறழ்வை விட குறைவான அறிகுறிகள் இருப்ப தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# மன்னார் காற்றாலை மின் நிலையத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய திடீரென விஜயம்!

*மன்னார், பெப். 02*

மன்னார் நடுக்குடா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் முதல் காற்றாலை மின்சக்தி பூங்காவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மன்னார் தாழ்வுபாடு தொடக்கம் நடுக்குடா வரை நிறுவப்பட்டுள்ள பாரிய காற்றாலை காரணமாக மீன் வளம் பெரிது பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தொடர்சியாக எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்ற மன்னார் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காற்றாலை செயல் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை நிறுத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட நிலையில் நேற்று குறித்த காற்றாலை பூங்காவுக்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டார்.

கடந்த வருடம் குறித்த நடுக்குடா காற்றாலை மின் செயல் திட்டத்தை பார்வையிடுவதற்காக இந்தியாவின் தொழில் அதிபரான அதானி வருகை தந்ததுடன் இலங்கைக்கான சீன தூதுவரும் காற்றாலை மீன் செயற்திட்டத்தை பார்வையிட்டிருந்தார்.

கடந்த மாதம் அளவில் காற்றாலை விரிவுபடுத்தல் திட்டத்துக்கான ஆய்வு நடவடிக்கைகளுக்காக விசேட குழுவினர் எருக்கலம்பிட்டி பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட நிலை யில் மக்களின் எதிர்ப்பால் குறித்த ஆய்வு நிறுத்தப் பட்டது.

அதேநேரம் தற்போது தாழ்வுபாடு தொடக்கம் சௌத்பார் கடற்கரை வரை காற்றாடிகளை பொருத்துவதற்கான விரிவுபடுத்தல் திட்டம் உயர் மட்ட ரீதியில் இடம்பெறுவதாகவும் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட நிலையிலேயே அவற்றை நிறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது.

கடந்த திங்கட்கிழமை காற்றாலை மின் திட்டம் மற்றும் கணியமணல் அகழ்வுக்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டு போராட்டம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## சுதந்திர...

காம் திகதி முற்பகல் 10 மணியளவில் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் மற்றும் வடக்கு - கிழக்கு சிவில் சமூகங்களின் ஏற்பாட்டில் மாபெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட இருக்கின்றது.

எனவே குறித்த போராட்டத்தில் இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள், தனியார் பஸ் சங்கங்கள், தமிழ்த் தேசியத்தின் பால் செயற்பட்டுவரும் கட்சிகள்,மதகுருமார்கள் என அனைத்து உறவுகளும் கலந்துகொண்டு எமக்கான ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்,

தமிழினத்துக்கான சுதந்திரம் கிடைக்காத நிலையிலேயே நாம் இதுவரை போராடிக்கொண்டிருக்கின்றோம். நாம் எமது உரிமையை இழந்திருக்கின்றோம், உறவுகளை இழந்திருக்கின்றோம். எனினும் உணர்வுகளை இழக்கக்கூடாது. தமிழனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் இது தலையாய கடமை என்பதை புரிந்துகொண்டு குறித்த போராட்டத்தில் ஒன்றிணைந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். நாம் அனைவரும் ஒருமித்து குரல்கொடுத்தாலேயே எமது உரிமையையும் சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு உளரீதியான ஆலோசனைகளை வழங்க தயாராக இருப்பதாக நீதி அமைச்சர் அண்மையில் தெரிவித்தார். நாங்கள் நன்றாகத்தான் இருக்கிறோம், எமக்கு மன உளைச்சல் இல்லை. எமது உறவுகள் கிடைக்கும் வரை நாம் சோர்ந்துபோய் ஒடுங்கிவிட மாட்டோம்.

எனவே எமது உறவுகளைகொச்சைப் படுத்தவேண்டாம் என்று அவரிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (அ-2-3)

## பருத்தித்துறை...

தின் நேற்றைய செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

அத்தோடு யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியையும் மறித்து வீதியில் இந்திய மீனவர்களால் அறுத்து நாசமாக்கப்பட்ட வலைகளையும் போட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்ததோடு பாடசாலை மாணவர்கள் மாத்திரம் வீதியால் செல்லுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-02-03)

## போராட்டம்...

அத்துடன், "இந்தப் போராட்டத்துக்கும் கடற்றொழிலாளர் சமாசம், சம்மேளனம் என்பவற்றுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை", என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய இழுவைப் படகுகளால் வத்திராயன் கடற்பரப்பில் இரு மீனவர்கள் உயிரிழந்தமைக்கு நீதி கோரியும், மீனவர்களின் வலைகள் நாசமாக்கப்பட்டமைக்கு எதிராகவும், தொடரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்தவும் கோரி நேற்று மூன்றாவது நாளாகவும் பருத்தித்துறை சுப்பர் மடத்தில் போராட்டம் தொடர்ந்தது.

வீதியில் பந்தல் அமைத்து இடம் பெற்று வரும் வீதியை மறித்து நடத்தப்படும் இந்தப் போராட்டம் குறித்து மீனவர் பிரதிநிதிகள் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

"வடபகுதி கடற்பரப்பில் எல்லை மீறும் இந்திய படகுகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது குறித்த உத்தரவாதத்தை தகுதி வாய்ந்த அதிகாரிகள் எழுத்து மூலமாக வழங்க வேண்டும். அதுவரை மீனவ சமுதாயத்தின் போராட்டம் திட்டமிட்ட வகையில் பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் தொடரும்.

"இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக எமது கடல் வளம் அழிக்கப்பட்டு எமது வாழ்வாதாரம் நாசமாக்கப்பட்டும் வந்த நிலையில், தற்போது இரு உயிர்களையும் பறி கொடுத்திருக்கிறோம். இந்நிலையில் இந்த அவலத்திற்கு நிரந்தர தீர்வு காணும் வரை மீனவர் சமுதாயம் பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் தொடர் சாலை மறியல் மற்றும் கடற்றொழில் மறிப்பு போராட்டத்தை முன்னெடுப்போம்.

இந்தப் போராட்டமானது பாதிக்கப்பட்ட மீனவர் சமூகம் ஒன்றிணைந்த மக்கள் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு சமாசம் மற்றும் சம்மேளனத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை. மக்களால் தொடரப்படும் இந்தப் போராட்டமானது மீனவர்களுக்கான உரிய தீர்வு கிடைக்கும் வரை தொடரும்.

மேலும், இந்தப் போராட்டத்தை வடமாகாணம் தழுவிய ரீதியில் விரிவுபடுத்துவதற்கு வர்த்தக சங்கங்கள், போக்குவரத்து அமைப்புகள், மற்றும் பொது அமைப்புகள் ஆதரவு வழங்குமாறு வேண்டுகிறோம் - என்றனர். (ஐ-2-3)

## 2030 இல்...

நேற்று புதன்கிழமை மன்னாருக்கு திடீர் கண்காணிப்பு பயணம் சென்ற அவர், தம்பபவனி காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை பார்வையிட்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், புதிய காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களை அமைக்கக்கூடிய இடங்கள் தொடர்பான அறிக்கையொன்றை உடனடியாகத் தயாரிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

தம்பபவனி மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 103.5 மெகா வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இங்கு ஓர் அலகு மின்னுற்பத்தியை மேற்கொள்ள, 8 ரூபாய்க்கும் குறைவான தொகையே செலவாகின்றது. இந்நிலையில், அங்கு மேலும் 50 மெகாவாட்ஸ் மின்சார உற்பத்தியை மேலும் அதிகரிக்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், 2030ஆம் ஆண்டாகும் போது, இந்நாட்டின் மொத்த மின்னுற்பத்தியில் 70 சதவீதத்தை மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுக்கள் ஊடாகப் பெற்றுக் கொள்வதே அரசின் நோக்கம் எனவும், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பற்ற வகையில், குறைந்த விலையில் மின்னுற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம், எதிர்காலத்தில் நுகர்வோர் செலுத்தும் மின் கட்டணத்தை குறைக்கவும் திட்டமிடப்படுகிறது - என்றும் ஜனாதிபதி தெரிவித்தார் என்று அவரின் ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உத்தரவாதம்...

சங்கப் பிரதிநிதிகளுடனான கூட்டத்தில் இது தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்ட மீனவர்கள் மத்தியில் கடற்படை அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன், செயலகக் கூட்டத்திற்கு மீனவர் பிரதிநிதிகளை அனுப்புங்கள் என்று கேட்டார். அவரின் இந்தக் கோரிக்கையை ஏற்க மீனவர்கள் மறுத்துவிட்டனர். (ஐ - 2)

## தொற்றுக்கு...

உயிரிழந்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 17 பேரும் 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 2 பேரும் அடங்குவர். தவிர, இறந்தவர்களில் 14 ஆண்களும், 5 பெண்களும் உள்ளனர்.

இந்த மரணங்களுடன் நாட்டில் தொற்றால் மரணமானவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 460 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# கர்ப்பவதி படுகொலை சந்தேகநபர் கைதானார்!

யாழ்ப்பாணம், பெப். 03

2017 ஆம் ஆண்டு ஊர்காவற்துறை - கரம்பொன் பகுதியில் இளம் கர்ப்பவதி கொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவை சேர்ந்த 36 வயதான சந்தேகநபர் கிளிநொச்சியில் வைத்துக் கைது செய்யப்பட்டாரெனப் பொலிஸார் கூறினர்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்திய போது அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சில சந்தேகநபர்கள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கரம்பொன் பகுதியில் கடந்த 2017 ஜனவரி 24 ஆம் திகதி ஞானசேகரன் ரம்சிகா என்ற இளம் கர்ப்பவதி கொலை செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் ஏற்கனவே இருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரின் தொலைபேசி அழைப்புகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு அமைய மற்றுமொரு சந்தேகநபர் கைதானார்.

# தேரர் தலைமையில் நேற்று கல்முனையில் போராட்டம்

## பிரதேச செயலக வளாகம் முற்றுகை

அம்பாறை, பெப். 03

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இஸ்லாமாபாத் வீட்டுத்திட்டத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரினால் அப்பிரதேச மக்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து கல்முனை விகாராதிபதி ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் தலைமையில் அப்பிரதேச மக்கள் நேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை கல்முனை சுபத்திராம விகாரைக்கு முன்னால் ஒன்று கூடிய மக்கள் அங்கிருந்து பேரணியாக கல்முனை பிரதேச செயலகத்தை வந்தடைந்தனர்.

இதனையடுத்து கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சுகாதாரப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகார சபை அமைந்துள்ள கட்டடத் தொகுதியின் பிரதான கதவை மூடி, வழிமறித்து தமது சுகாதார பிரச்னைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தீர்வை வழங்கவேண்டும் என கோரி குறித்த இடத்தில் அமர்ந்திருந்தனர்.

இதனையடுத்து இந்த பகுதிக்கு வருகை தந்த கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடி சுமுகமான தீர்வை எட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பொதுமக்கள் அங்கிருந்து செல்ல வில்லை. மாநகரசபை முதல்வர், சுகாதாரத் தரப்பினர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த இடத்துக்கு வருகை தந்து பொது மக்களின் பிரச்னைக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் பேசிய போதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்களின் வாக்குறுதியை ஏற்றுக்கொள்ளவில்லை, தமிழர் பிரச்னைக்கு உடனடியாக தீர்வு வழங்கவேண்டும் என கோரி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக பிரதேச செயலக வளாகத்துக்குள் அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் செல்ல முடியாமல் இருந்ததோடு, குறித்த வீதியூடாக போக்குவரத்தும் தடைப்பட்டு காணப்பட்டன. (அ)

## சகல...

இந்த தகவலை கல்வியமைச்சு அறிக்கை மூலம்உறுதிபடுத்தியுள்ளது.

முன்னதாக உயர்தரப் பரீட்சைக்கான பாடசாலை விடுமுறை காலத்தில் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று கல்வியமைச்சு கூறியிருந்தது.

இந் நிலையிலேயே புதிய அறிவிப்பு நேற்று வெளியானது. (ஐ)

## தமிழர்...

யில் அமர்ந்துள்ள கல்கமுவை சாந்தபோதி நாயக்க தேரர் என்ற பௌத்த பிக்குவும், தொல்லியல் திணைக்களத்தினரும் மேற்படி காணிகள் அனைத்தும் குருந்தூர்மலை புண்ணிய பௌத்த பூமிக்கு சொந்தமான தொல்லியல் நிலங்கள் எனவும், இந்தப் பகுதியில் இனிமேல் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது எனவும் அவ்வாறு ஈடுபட்டால் கைது செய்வோம் எனவும் அச்சுறுத்தியுள்ளனர் என்று காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், கடந்த காலபோக செய்கையை செய்யமுடியாது தாம் விவசாய நடவடிக்கையை கைவிட்டுள்ளதாகவும் காணிக்குரிய ஆவணங்கள் அனைத்தும் இருந்தும், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் காணிக்குரிய அனுமதிகளை உறுதிப்படுத்துள்ள நிலையிலும், பௌத்த பிக்குவின் அச்சுறுத்தல் காரணமாக அந்த நிலங்களில் விவசாய நடவடிக்கையை கடந்த கால போக செய்கை காலம் முதல் கைவிட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ)

## யாழ். மாவட்ட...

வருவதாக மீனவர்கள் சாடி வருகின்றனர். இந்நிலையில், அவர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடமராட்சி மீனவர்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், இன்றைய தினம் காலை 7 மணி தொடக்கம் மாவட்ட செயலகத்தின் வாயில்களை மூடிப் போராடவுள்ளனர் என்று மீனவர் அமைப்புக்கள் அறிவித்துள்ளன. (ஐ)

## வடக்கில் நேற்று...

பழை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுப்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு விமானப் படை முகாமில் 9 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்

வவுனியா மாவட்டத்தில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் இருவருக்கும், பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனையில் இருவருக்குமாக நால்வருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## விமல் மீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 03

அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக, 75 மில்லியன் ரூபாய் சொத்து தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று காலை கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது.

இதன்போது, குறித்த மனு மீதான விசாரணை ஜூன் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அமைச்சர் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி சுகயீனம் காரணமாக நேற்று நீதிமன்றில் முன்னிலையாக வில்லை எனவும் அதனால் விசாரணை பிற்போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)







## மரண அறிவித்தல்

பிறப்பு 12 - 12 - 1965



இறப்பு 26 - 01 - 2022

### சுப்பிரமணியம் ஜெயானந்தன் (ஜெயா)

**(பழைய மாணவன், யாழ்– கொக்குவில் இந்துக்கல்லூரி)**

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் ீயசளை ஐ வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஜெயானந்தன் அவர்கள் 26.01.2022 புதன்கிழமை அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார், ஆனந்தர் சுப்பிரமணியம், காலஞ்சென்ற பவளரத்தினம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், பவானந்தன் (அவுஸ்திரேலியா). கருணானந்தன்(கனடா), சுத்தானந்தன்(கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், சாரதாதேவி(அவுஸ்திரேலியா), றமணி (கனடா), குகதேவி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தீனதயா, சோபி, ரூபினி, அகிலன், குகானந், அருணன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**பவா - நண்பர்**
**Mobile : +33612387173**

தகவல்:
**குடும்பத்தினர்**

## ஆசிரியையின் அபயா உடை விவகாரம்

# திருமலை சண்முகா கல்லூரியில் மாணவிகள் பெரும் போராட்டம்!

**திருமலை, பெப்ரவரி 03**

**அபயா அணிந்து வரவேண்டாம் எனக் கூறியிருந்தபோதிலும், ஆசிரியை ஒருவர் குறித்த ஆடையுடன் கல்லூரிக்குச் சென்றதால் திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் சர்ச்சை நிலை உருவாகியது.**



ஆசிரியையின் இந்த செயல்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு முன்னால் நேற்று மாணவிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2017ஆம் ஆண்டு இப்பாடசாலையில் அபயா பிரச்னை பாரிய பிரச்னையாக உருவெடுத்த நிலையில், அந்தப் பாடசாலையில் ஏற்கனவே கடமையாற்றி வந்த ஆசிரியை மீண்டும் பாடசாலைக்கு நேற்று சென்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த பாடசாலை அதிபர் காரியாலயத்தில் கடமையைப் பொறுப்பேற்க சென்ற நிலையில், பாட சாலை நிர்வாகத்துக்கும் குறித்த பெண் ஆசிரியைக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்தப் பாடசாலையின் அதிபரை அபயா அணிந்து வந்த ஆசிரியை தாக்கினார் எனவும், இதேவேளை அபயா அணிந்து வந்தமையால் கோபம் கொண்ட அதிபர் தன்னை தாக்கினார் எனவும் கூறி அதிபரும் மேற்படி ஆசிரி யையும் திருகோணமலை பொது வைத் தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கென சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான நால்வருக்கு பிணை

### ஏறாவூர் நீதிமன்றம் உத்தரவு

மட்டக்களப்பு, பெப். 03

மட்டக்ளப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவில் பயங்கரவாத தடைச் சட்டத் தின் கீழ் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நால் வர் நேற்று ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தால் பிணை யில் விடுவிக்கப்பட்டனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனை தொடர்பான கடித்தின்படி குறித்த வழக்குக்கான நகர்த்தல் மனு நீதி மன்றில் நேற்று புதன்கிழமை சமர்ப்பிக்கப் பட்டவேளை ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதி கறுப்பையா ஜீவராணியால் பிணை வழங்கப்பட்டது.

கடந்த 2020 நவம்பர் 27 ஆம்,28 ஆம், திகதிகளில் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி சித்தாண்டி ஏறாவூர் மற்றும் ஐயங்கேணி போன்ற பகுதிகளைச் சேர்ந்த பேர் க.சோபனன், யோ.யோகேஸ்வரன் , வ.விவேந்த், க.ஜெகநாதன் ஆகியவர்களே நேற்று பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

இவர்கள் முகப் புத்தகத்தில் அரசினால் தடை செய்யப்பட்ட தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத் தலைவரின் புகைப்படத்தை பதிவிட்டதன் பிரகாரம் ஏறாவூர் பொலிஸாரினால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டிருந்தனர்.

சுமார் 13 மாதம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த நால்வரும் சட்டமா அதிப ரின் வேண்டுகோளுக்கிணங்க நேற்று தலா 02 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (அ)

## கொழும்பிலும் 9 பேருக்கு பிணை!

கொழும்பு, பெப். 03

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 09 பேருக்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த இவர்கள் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கே இவ்வாறு பிணை வழங்கப்பட்டது. (அ)

## ஸ்ரீவெங்கடேஸ்வரா ஸ்ரீஅபிராமி திருமண மாலை முன்கட்டணம் $30

**Canada, France, Germany, Italy, U.K, Switzerland, India, Sri Lanka நாடுகளிலுள்ள பட்டதாரிகள், Divorce ஆனவர்களோடு எல்லா வகுப்பினர்கள் உட்பட 300 இற்கு மேற்பட்ட ஜாதகங்கள் படத்துடன் எம்மிடம் உள்ளன.**

**கனடா பெண்கள்**
1) 13.09.1993, கிறிஸ்தவர் - சிகை அலங்கரிப்பாளர்
2) 10.11.1991, உத்தராடம் - 4 B.Sc Kaddady
3) 25.04.1989, கேட்டை - Engineer
4) 05.10.1988, ஆயிலியம் - B.Sc.
5) 05.03.1987, பரணி - Chemical Engineering

**கனடா ஆண்கள்**
04.03.1981, Cheff (Working)
22.01.1983, அச்சுவினி - A/C Analist (Hydro - Government)
16.09.1987, திருவாதிரை - Electrical Engineer (Working)
21.03.1980, கார்த்திகை - (U.K) M.Sc. - Computer Science

**Divorce No Children Canada (Male)**
1) 05.06.1968, உத்தரம் - Purchasing Officer

**Divorce No Children - Canada (Female)**
1) 12.06.1983, விசாகம் - B.Com (Working)

**Divorce - In U.K (Male) - Doctor - MBBs, MRCGP(G.P.-Partner)**
28.07.1981, திருவாதிரை - U.K - Europe Only

இலங்கையில் சில திருமணங்களை செய்து வைத்தவர்
**ராம் அலெக்ஷாண்டர்**
**T.P: 076 169 2469 0041 6720 8975**
whats app, viber

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர்
திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன்
ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தில்லுக்கு துட்டு,
யாமிருக்க பயமேன்
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை
**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய
நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உடைடம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்